Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-08 21-03-2005 திங்கட்கிழமை ஓசை 31




கணேசா நகையகம்


தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-11456)


## "புதுநானூற்றின் பரணி" கனடாவில் சிறப்புற வெளியீடு!



கனடாவை தளமாகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும் ஈழநாடு பத்திரிகையால் தேசியத் தலைவர் அவர்களின் 50 ஆவது அகவையை ஒட்டி கவிதைப் போட்டிகள் நடாத்தப்பட்டது. அதில் பரிசில்களை பெற்ற கவிதைகள் "புதுநானூற்றின் பரணி" என்ற புத்தகமாக நேற்று முன்தினம் ரொரன்ரோ சேர்ஜோன் மக்டோன ல்ட் கல்லூரியில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வு ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ரி.கே. பரமேஸ்வரன் தலைமையில் மாலை 5.30 மணியில் இருந்து நள்ளிரவு 12 மணிவரையும் இடம் பெற்றது.

"வாழும் மண்ணில் ஈழப்பொழுது" எனும் இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை ஈ.வே. இராசையாவும், கனடா தேசியக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸ் கப்பல் ஒன்று சிறிலங்காவிற்கு அன்பளிப்பு!

### 150 மில். யூரோ பெறுமதியாம்

பிரான்ஸ் 130 மில்லியன் யூரோ பெறுமதியான கப்பல் ஒன்றை இலங்கைக்கு நேற்று வழங்கியுள்ளது.

55 அடி நீளத்தையும் 100 தொன் எடையையும் உடைய இக் கப்பல் நவீன தொழில் நுட்ப உபகரணங்களைக் கொண்டுள்ளது. வீடமைப்பு நிர்மாண கைத்தொழில் பிரதியமைச்சர் இக் கப்பலைகாலித் துறைமுகத்தில் வைத்து கையேற்றுள்ளார். இலங்கை கடற்படை அதிகாரிகள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர்.

இதேவேளை பிரான்ஸ் லோரியம் சிறிலங்கா நட்புறவுச் சங்கம் நேற்று சுனாமி நிவாரண உதவித் தொகையொன்றையும் கையளித்துள்ளது.

### ஆறு இல.தமிழர்கள் திருச்சியில் கைது

போலி ஆவணங்களுடன் தென் இந்தியத் திருச்சி விமான நிலையத்தின் ஊடாக இந்தியாவிற்குள் நுழைய முனைந்த ஆறு இலங்கைத் தமிழர்களை இந்தியப் பொலிசார் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் சிறுவர்கள் எனஅறிவிக்கப்பட்டுள்ளது.மேலதிக விசாரணைகளை திருச்சிப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர். (32)

# சர்வசன வாக்கெடுப்பிற்கு எதிராக ஐ.தே.க.

# எதிர்க்கட்சிகளை அணி திரட்ட முடிவு!

## போராடுவோம் எனவும் எச்சரிக்கை

(கொழும்பு)

**சர்வசன வாக்கெடுப்பொன்றை சனாதிபதி சந்திரிகா நடத்த முயல்வாரேயானால் அதற்கு எதிராக பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்க்கட்சிகளை அணிதிரட்டவும் இத்தேர்தலுக்கு முகம் கொடுக்கவும் ஐ.தே.கட்சியின் அரசியல் பீடம் முடிவு செய்துள்ளது.**

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் நோக்கில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளதாக வெளியாகும் தகவல்களைத் தொடர்ந்தே ஐ.தே. கட்சி இம்முடிவுக்கு வந்துள்ளது. இனப்பிரச்சினைக்கு சமஷ்டித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொருட்களின் விலையேற்றம் நாட்டில் மேலும் பல பிரச்சினைகளை உருவாக்கும்!

### ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர் பீரிஸ்

நாடும் மக்களும் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த வேளையில் பொருட்களின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பு நாட்டு மக்களிடையே 'மேலும் பல பிரச்சினைகளை ஏற்படுத்தலாம் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் நாட்டில் மீள் கட்டுமாணப் பணிகளிற்குரிய பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழ் தேச விரோத கும்பலின் முகாம்!

### -படங்களுடன் ஆங்கில வாரஇதழ் தகவல்





(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடுப் பிரதேச கட்டுப்பாட்டுப் பகுதியான தீவுச்சேனைப் பகுதியில் தமிழ் தேசவிரோதக் குழுவினரின் முகாம் ஒன்று கடந்த ஏழு மாதங்களாக செயற்பட்டு வருகின்றது என கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே லீடர் ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. இச்செய்திக்கு ஆதாரமாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக்குழுக்களின் முகாம் எதுவும் இல்லையாம்

### இராணுவ அதிகாரி தயாரட்நாயக்க கூறுகிறார்

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக்குழுவின் முகாம் எதுவும் கிடையாது. இதனை உறுதியாகவும், தெளிவாகவும் கூறமுடியும் என இராணுவ அதிகாரி தயாரட்நாயக்க கூறினார். சண்டே லீடர் ஆங்கில பத்திரிகையில் ஆயுதக்குழுவின் முகாம் ஒன்று பொலநறுவை வெலிக்கந்தைக் காட்டுப்பகுதியில் கடந்த ஏழு மாத காலமாக இயங்கிவருவதாக முகாமின் படத்துடன் செய்தி பிர சுரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இராணுவ அதிகாரி தயாரட் நாயக்கவிடம் ஊடகம் ஒன்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு-கொழும்பு ரயிலில் கிளைமோருடன் ஒருவர் கைது

(மட்டக்களப்பு)

கொழும்பு - மட்டக்களப்பு இடையேயான இரவு தபால் ரயிலில் பயணம் செய்த பயணியிடமிருந்து இரண்டு கிளைமோர் குண்டுகளை பொலிசார் நேற்று முன்தினம் கண்டுபிடித்தனர்.

வெலிக்கந்தை கரபொல கிராமத்தைச் சேர்ந்த இயங்கொடகே நந்த என்ற அந்தப் பயணியை பொலநறுவை பொலிசார் கைது செய்துள்ளனர். மட்டக்களப்பிலி

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிலாவத்துறை இராணுவ முகாம் தாக்குதல் 14 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு

மன்னார் மாவட்டத்தில் சிலாவத்துறையில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலின் 14 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வும், இத்தாக்குதலின் போது வீரச்சாவைத்தழுவிக்கொண்ட கரும்புலி மேஜர் டாம்போ உட்பட 81 மாவீரர்களின் நினைவு நிகழ்வும் சிலாவத்துறை பொது மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்வின் முன்னதாக மன்னார் அரிப்பு றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலய மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் கரும்புலி மேஜர் டாம்போவின் திருவுருவப்படம் எடுத்து வரப்பட்டது.

தமிழீழத் தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவரசி ஏற்றிவைத்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

இயக்கச்சி-ஆனையிறவுக்கும் இடையில் வல்லிபுரம்-கிருபாகரன் என்பவருடைய 691650588V I.C, பாஸ் 17.03.2005 மாலை 2.00 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உப்பு உ..தி நிறுவனம் ஆனையிறவு அல்லது கிராமிய அபிவிருத்தி வங்கி, கிளிநொச்சியில் ஒப்படைக்கவும்:- தகவல் கிருபாகரன்.(5866)

### விற்பனைக்கு

புதுக்குடியிருப்பில் சுவையூற்றிற்கு மிக அண்மையில் புனித சூசையப்பர் கோவில் வீதியில் வீடு, காணி சகல அடிப்படை வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இன்பம் மணிக் கூட்டு விற்பனை நிலையம், புதுக்குடியிருப்பு, இனியவள் அழகு மாடம் பிரதான வீதி, முல்லைத்தீவு.(5909)

### விற்பனையாகின்றன

அஸ்ரன் பதிப்பு G.C.E.O/L கடந்த கால வினாவிடை (1993-2004) புத்தகங்கள் பெற்றுக் கொள்ளவும், போட்டோ பிரதி செய்து பெற்றுக் கொள்ளவும் குயிலன் புத்தகசாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சி.(சி.11544)

## நோர்வே தலைநகர் ஒஸ்லோவில்

# தாயகக் கலைஞர்களின் மாபெரும் எழுச்சி நிகழ்வு

(ஒஸ்லோ)

**விடுதலைப்புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் "தாயக விடுதலைப் பறவைகள்" கலைஞர்களின் சங்கமத்துடன் நோர்வேத் தலை நகர் ஒஸ்லோவில் மாபெரும் எழுச்சி நிகழ்வு நேற்று முன்தினம் நடை பெற்றது.**

ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இவ் எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். அகவணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில், தாயக விடுதலை கானங்கள் முதலில் இசைக்கப்பட்டன. தொடர்ந்து பாலா ஆசிரியரின் நெறியாள்கையில் "சூரிய தேவியின் சோகங்கள்", புதுவை அன்பனின் நெறியாள்கையில் "கரைதேடும் ஓடங்கள்", ஆகிய இரண்டு நாடகங்கள் அரங்காற்றுகை செய்யப்பட்டன.

இந்நாடகங்களும் கலைஞர்களுடைய கலை ஆளுமை, நோர்வே வாழ் தமிழ் மக்களின் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளன.

தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு, சிறப்புரை என்பன இடம்பெற்றன. தாயகக் கலைஞர்களுக்கு பொறுப்பாளராக இருந்து வழிநடத்தி வரும் போராளி செல்வம் மாமா அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

"சுதந்திர தாகம் சுமந்து வந்து வெண்பனி தேசத்தில் கலை விதைத்துச் செல்லும் தாயக விடுதலைப் பறவைகள் கலைஞருக்கு நன்றிகள்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட நினைவுக்கேடயம் வழங்கி கலைஞர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

## நாளை முக்கிய கலந்துரையாடல்

பாண்டியன்குளம் பிரதேசத்தில் அம்பாள் குளத்தில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைக்கான கலந்துரையாடல் நிகழ்வு நாளை பிற்பகல் 2.00 மணிக்கு பாலிநகர் அரசியல்துறைச் செயலகத்தில் இடம் பெறவுள்ளது. அத்துடன் அனைத்து மாவீரர் பெற்றோர்களுக்கான சந்திப்பு நிகழ்வு பி.பகல் 04.00 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதில் தொடர்புடையவர்களை கலந்து கொள்ளுமாறு பாண்டியன் குளம் பிரதேச அரசில்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (24)

# வடக்கு கிழக்கு மாகாணத்தில் 3000 ஆசிரியர்களுக்கு வெற்றிடம்

## —வடக்கு கிழக்கு மாகாண அமைச்சு செயலாளர் தியாகலிங்கம் தெரிவிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் மூவாயிரம் ஆசிரிய வெற்றிடங்கள் நிலவுவதாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட் டுத்துறை அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இம்மூவாயிரம் ஆசிரிய வெற்றிடங்களிலும் ஆயிரம் ஆரம்பக் கல்வி ஆசிரிய வெற்றிடங்களும், எழுநூறு ஆங்கில ஆசிரிய வெற்றிடங்களும் உள்ளடங்குவதாகவும் இவ் ஆசிரிய வெற்றிடங்களில் பெரும் பாலானவை முல்லைத்தீவு மடு, கிளிநொச்சி, துணுக்காய், வவுனியா வடக்கு, அக்கறைப்பற்று ஆகிய வலயங்களிலேயே காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## - காணி உரிமைப்பிரச்சினைகளை இலகுவில்தீர்க்க -

# வடக்கு–கிழக்கு மாகாணசபையில் வேலைப்பட்டறை பயிற்சி ஆரம்பம்

(திருகோணமலை)

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் வீடுகளை இழந்த மக்கள் அரச நிதியுதவியுடன் தமது வீடுகளை மீள நிர்மாணிப்பதில் எதிர்நோக்கும் காணி உரிமைப் பிரச்சினைகளை இலகுவில் தீர்த்து வைக்கும் வழிமுறைகளை வகுப்பதற்கான முதலாவது வேலைப்பட்டறை இன்று உப்பு வெளியில் உள்ள மாகாண சபை விருந்தினர் விடுதி மண்டபத்தில் ஆரம்பமாகிறது.

மாகாணசபையின் பிரதம செயலாளர் சி.இரங்கராஜா பட்டறையை அங்குரார்ப்பணம் செய்து வைக்கின்றார். வடக்கு-கிழக்கு மாகாணத்தின் மாவட்ட அரசாங்க அதிபர்கள் பிரதேச செயலாளர்கள், காணி ஆணையாளர்கள், காணி உத்தியோகர்த்தர்கள் குடியேற்றத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் பங்கு பற்றுகின்றனர்.

வடக்கு-கிழக்கில் காணித் திணைக்களத்தினால் இனங்காணப்பட்டுள்ள அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட பிரச்சினைகளுக்கு இலகுவில் தீர்வுகாணும் பொருட்டு உருவாக்கப்பட்ட மாவட்டச் செயலணிகளின் அதி காரிகளுக்கென இவ்வேலைப்பட்டறை நடாத்தப்படுகின்றது. (25)

# முல்லை.மாவட்ட அழகக சங்கத்தால் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்

(ஒட்டுசுட்டான்)

முல்லை.மாவட்ட அழகக சங்கங்களின் கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை கற்சிலைமடுவில் நடைபெற்றது.

முல்லை.மாவட்ட அழகக சங்கத் தலைவர் சந்திரலிங்கம் தலைமையில் ஒட்டுசுட்டான் அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கட்டணங்கள் உயர்த்தல், சங்க உறுப்பினர்களின் நலன் பேணலுக்காக கமநலசேவையூடாக ஓய்வூதியத்திட்டத்தை மேற்கொள்ளல், நிலையங்களில் சுகாதாரத்தைப் பேணல் போன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. இதில் சுகாதாரப் பிரதிநிதி சுகாதாரம் பேணல் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மேலும் ஒட்டுசுட்டான் பிரதேச அழகக சங்கப் புதிய குழுத் தெரிவும் நடைபெற்றது.

தலைவராக தி.சிறிகாந், செயலாளராக மா.இளங்கேஸ், பொருளாளராக மோகனதாஸ், போசகராக லோகேந்திரன் ஆகியோருடன் ஐந்து நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இக்கலந்துரையாடலில் முல்லை.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை பொறுப்பாளர் ஈழவன், தொழிற்சங்கப் பொறுப்பாளர் பிறையாளன், ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (05)

# வவுனியா நெடுங்குளம் பகுதியில் கஞ்சாவுடன் சிங்களப் பெண் கைது

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா நெடுங்குளம் பகுதியில் கஞ்சா வைத்திருந்த சிங்களப் பெண் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெடுங்குளம் பகுதியில் சிங்களப்பெண் ஒருவர் கஞ்சா வைத்திருப்பதாக வவுனியா பொலிசாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்து சென்ற பொலிசார் சந்தேகத்திற்கிடமான பெண்ணைக் கைது செய்து விசாரணை செய்ததுடன் அவரின் வீட்டையும் சோதனையிட்டனர். இதன் போது அப்பெண்ணிடம் இருந்து 610 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்ணை பொலிசார் வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்துள்ளனர். (10)

## யாழ்.போதனா வைத்திய சாலையில்

# மருத்துவ பீட மாணவர் இன்று இரத்த தானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இன்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் இரத்த தானம் வழங்கவுள்ளனர்.

காலை 8.00 மணிக்கு இந்த இரத்ததானம் வழங்கும் நிகழ்வு ஆரம்பமாகும்.

யாழ்.மருத்துவபீட 26 ஆம் அணி மாணவன் அமரர் கந்தசாமி சரவணபவனின் முதலாம் ஆண்டு நினைவாக இந்த இரத்த தானம் வழங்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

# சிறு வீதிகள் புனரமைப்பு

புதுக்குடியிருப்பு நகரையண்டியுள்ள பகுதிகளில் உள்ள சில சிறு வீதிகள் கிரவல் இட்டு புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

புதுக்குடியிருப்பு முல்லை வீதியின் இரண்டு சிறு வீதிகளும், புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் சுவையுற்றுக்கு அருகில் உள்ள வீதியும் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. அத்துடன் முக்கிய இடங்களில் நீரோடியும் கட்டப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. (08)

## —பனை,தென்னை வள அ.கூ.சங்கத்தினர்—

# —பளைப்பிரதேசத்தில் முக்கிய கலந்துரையாடல்

(பளை)

பளைப்பிரதேச பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் கடந்த வெள்ளிக் கிழமை பகல் 12.00 மணிக்கு இடம் பெற்றது.

பளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் புவனேந்திரன் தலைமையில் பளை பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்க சமாச மண்டபத்தில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

கருத்துரைகளை பளை கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன், பளை காவல்பணிமனை காவல்துறை உறுப்பினர் பிரபா ஆகியோர் வழங்கினர்.

இதன் போது பளை கோட்ட பகுதியில் பனை மரங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனாலும் இம் மரங்களிலிருந்து பெறப்படும். பதநீரை இவ்வருடத்திலேயே கூடுதலாகப் பெறுவதுடன் உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டுமெனவும் முடிவெடுக்கப்பட்டது. (46)

# அடிப்படை வசதிகள் கிடைக்க வழியேற்படுமா?

(முகமாலை)

முகமாலை சோதனைச் சாவடியில் இருந்து பளை நகரம் வரையான பிரதேசத்தில் பொது மலசல கூட வசதிகள், பொதுக்கிணறு வசதிகள் என்பன இல்லாததால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் இரவு வேளைகளில் தரித்து நிற்கும் பயணிகளும், வாகனச் சாரதிகளும் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் சிக்கல்களுக்கு உள்ளாகின்றனர்.

இதனால் இப்பகுதியில் சுகாதாரம் சீர்கெடும் நிலையில் காணப்படுகின்றது.


சம்பந்தப் பட்ட தரப்பினர் இவ் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென பாதிக்கப்படும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (46)

# கடத்தப்பட்ட பசுமாடுமீட்பு

(வவுனியா)

வவுனியா நெடுங்குளம் பகுதியில் பசுமாடு ஒன்று கடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது அது மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நெடுங்குளம் பகுதியில் மாட்டு வண்டி ஒன்றில் பசுமாடு ஒன்று கால்கள் கட்டப்பட்ட நிலையில் கடத்தல்காரர்களால் கடத்திச் செல்லப்பட்டுக் கொண்டிருக் கையிலேயே சிறிலங்காப் பொலிசார் அதனை மீட்டுள்ளனர். (10)



பிரித்தானியாவில் வேல்ஸ் பகுதியில் கடந்த 22 வருடங்களாக சிரேஷ்ட கண் வைத்தியராக கடமையாற்றி வருகிறேன். எனது பூர்வீகம் ஈழம்.

நவீன வைத்திய தொழில் நுட்ப உபகரணங்களை எதிர் வரும் காலத்தில் படிப்படையாக இப் பகுதிக்குள் கொண்டு வந்து முழுமையான வைத்திய வசதிகளை இங்கு ஏற் படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச நாடுகளில் எம் மக்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட பெருமளவான உறவுகள்

**லண்டனில் இருந்து வருகை தந்து புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் கண் சத்திர சிகிச்சையினை மேற்கொள்ளும் சிரேஷ்ட கண் வைத்திய நிபுணர் டாக்டர் புவனச்சந்திரன் அவர்களின் விசேட செவ்வி**

இருக்கின்றன. அவர்களை ஒருங்கிணைத்து எதிர் வரும் காலங்களில் மேலும் பல நவீன வைத்திய உபகரணங்களை கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளவுள்ளேன். அத்துடன்

யை 13ஆம் திகதியிலிருந்து இன்று வரை நீடித்தோம்

இரண்டு மூன்று மாதங்களிற்கு ஒரு தடவையாவது கண் சிகிச்சை மேற்கொள்ள இப் பகுதிக்கு வந்து சேவையாற்றுவது நல்லது என நினைக்கிறேன்.

இந்த வைத்தியசாலையில் உள்ள ஆளணியினர் மிகவும் கெட்டித்தனமாக தங்களால் இயன்ற உதவிகளைச் செய்தார்கள். இவர்களின் உதவி எமக்குக் கிடைக்காவிட்டால் நாம் எமது சேவையை பத்து வீதம் அளவு கூட செய்திருக்க முடியாது? அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

நாம் மக்களின் ஆர்வத்தையும் தூண்டி விட்டுள்ளோம்.

**எமக்கு சில சிக்கல்கள் இருக்கின்றன. இலகுவில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இப் பகுதிக்கு வைத்திய உபகரணங்களையும் தேவையான மருந்துப் பொருட்களையும் கொண்டு வர முடியவில்லை**

# "எம் மக்களுக்கு கண் பார்வையளிப்பதில் மகிழ்வடைகிறேன்"

நான் பிரித்தானியாவில் இருந்தாலும் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்ற போதெல்லாம் இப் பகுதிக்கு வந்து எமது மக்களுக்கு சேவையாற்றியுள்ளேன்.

அங்கிருந்தவாறு இங்குள்ள வைத்தியர்களுக்கு ஆலோசனைகளையும் தேவையான தொழில்நுட்ப சாதன உதவிகளையும் பயிற்சிகளையும் வழங்கி யிருக்கின்றேன்.

யுத்த நிறுத்தம் ஏற்பட்ட பின்னர் நான் வன்னிப் பகுதிக்கு வந்து இந்தப் பகுதிகளில் உள்ள வைத்திய தேவைகள் குறித்து ஆராய்ந்தேன்.

இந்தப் பகுதியில் வைத்திய தேவைகளுக்கான உபகரணங்களும் ஆளணி வசதிகளும் போதியதாக இருக்கவில்லை. இதன் பின்னர் லண்டன் சென்று எனது நண்பர்களுடனும் முக்கிய நிறுவனங்களுடனும் கதைத்து எங்களால் இயன்ற வைத்திய உபகரணங்களை அனுப்பி வைத்தோம்.


கண் வைத்தியத்தைப் பொறுத்த மட்டில் புதுக்குடியிருப்பு

**இனிவரும் காலங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் தொடர்பு கொண்டு நாம் வழங்கும் வைத்திய உதவிகள் இப்பகுதிகளுக்கு கிடைக்க ஏற்பாடுகளை செய்யவுள்ளோம்.**

பொன்னம்பலம் மருத்துவமனையில் வசதிகள் உள்ளன. இதனை விடவும் மேலும் கண் வைத்தியத்திற்கான நவீன உபகரணங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

வன்னிப் பிரதேசத்தில் கடந்த இருபது வருட காலத்துக்கு மேலாக மக்களுக்குரிய வைத்திய வசதிகள் இல்லாமல் போய் விட்டன. இதனால் மாற்றக்கூடிய பல நோய்கள் மாற்றப்படாமல் இருந்தன. எனவே இருபது வருடங்களாக மாற்றப்படாமால் இருந்த சுகயீனங்களை இப்போது தான் நான் காணக் கூடியதாகவுள்ளது.

பூரணமான வைத்திய உபகரணங்களை வைத்துக் கொண்டு தான் சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும் என நினைத்தால்



அது நடைபெற மாட்டாது. கிடைக்கக்கூடிய வைத்திய உபகரணங்களையும் ஆளணி வசதிகளையும் வைத்துக் கொண்டு இந்தச் சமாதான சூழலைப் பயன்படுத்தி முடிந்தளவு சிகிச்சைகளை செய்ய வேண்டும். அப்போது நோயாளர்களின் தொகை குறைக்கப்பட்டு விடும்.


எதிர்வரும் நாட்களில் இலவசமாக இப்படியான சிகிச்சைகளை எம் மக்களுக்கு வழங்க உத்தேசித்துள்ளோம்.

இம்முறை எமது பயணத்தின் போது சகல வைத்தி

**தற்போது சிறிலங்காவில் இருக்கின்ற சட்டங்களின் படி நாங்கள் கொண்டு வரும் பொருட்கள் எல்லாவற்றையும் அரசாங்க வைத்தியப்பிரிவுக்கே கொடுக்க வேண்டியுள்ளது..**

யத்திற்குமென நூற்றிஐம்பது பேர் வந்துள்ளோம். இவர்களில் முப்பத்தி மூன்று பேர் வைத்தியர்கள். இதில் நான்கு பேர் மட்டுமே கண் வைத்தியர்கள்.

ஆனால் இலங்கையின் மலையகப் பகுதியில் இருந்தும் ஏனைய பகுதிகளிலிருந்தும் எம்முடன் சேவை செய்ய விரும்



புவர்களை இணைத்துக் கொண்டு நாங்கள் பல பகுதிகளிலும் சேவையில் ஈடுபட்டுள்ளோம். அதன் ஒரு குழுவாகவே நாம் இவ் வைத்தியசாலையில் சேவையிலீடுபட்டுள்ளோம்.

சர்வதேச நாடுகளில் இருக்கும் சகல துறை வைத்திய நிபுணர்கைளையும் வைத்திய ஆளணியினரையும் சந்தித்து அவர்களின் உதவியுடன் இப் பகுதி மக்களுக்கு செய்ய வேண்டிய பல்வேறு வகையான நோய்களுக்குமான சிகிச்சைகளை மேலும் வழங்க வேண்டும் என ஆசைப்படுகின்றேன்.


இப் பகுதியில் வைத்திய சேவை மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ளது. வைத்தியசாலைக்கான கட்டட வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். நவீன வைத்திய உபகரணங்கள் கொண்டு வரப்பட வேண்டும். வைத்திய ஆளணியினருக்கு பயிற்சிகள் வழங்க வேண்டும். பயிற்சியளிக்க வேண்டும் இப் பகுதி வைத்திய ஆளணியினரை தங்களுடைய காலிலேயே நிற்க வைத்தால் அவர்கள் தொடர்ந்து சேவை செய்வார்கள்.

நாம் இங்கு வைத்திய சேவைக்காக வரும் போது எமது சேவை எவ்வளவுக்கு அவர்களுக்குத் தேவையாக இருக்கும். எம்மை எவ்வளவுக்கு அங்கீகரிப்பார்கள் என்று எமக்குத் தெரியாது. ஆனால் நாம் இரண்டு மூன்று நாட்களுக்கே புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையில் சேவையாற்ற நினைத்தோம். ஆனால் மக்களின் கண் வைத்திய தேவை மிக மிக அதிகமாக இருந்தது அதனால் எமது எமது சேவை

இவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எமக்குத் தூண்டப்பட்டு விட்டது. நாம் இப் பகுதிக்கு வந்து பார்த்ததாலேயே இம் மாற்றம் எம்மில் ஏற்பட்டது. எனவே ஆர்வத்தைத் தூண்டி விட்டு அம் மக்களை இடையில் கைவிட்டு விட்டுப் போவது நல்லதல்ல. ஆகையால் இயலுமான அளவு தொடர்ச்சியாக இப் பகுதி மக்களுக்கு சேவை செய்ய ஆசைப் படுகின்றோம்.

ஆனாலும் எமக்கு சில சிக்கல்கள் இருக்கின்றன. இலகுவில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இப் பகுதிக்கு வைத்திய உபகரணங்களையும் தேவையான மருந்துப் பொருட்களையும் கொண்டு வர முடியவில்லை.

கொழும்பில் வந்து விமானத் தளத்தில் இறங்கியவுடன் தற்போது சிறிலங்காவில் இருக்கின்ற சட்டங்களின் படி நாங்கள் கொண்டு வரும் பொருட்கள் எல்லாவற்றையும் அரசாங்க வைத்தியப்பிரிவுக்கு கொடுக்க வேண்டும். பின்னர் நாம் சேவையாற்ற வேண்டிய பகுதி அரச மருத்துவமனையில் அப்பொருட்களின்



தேவை இருப்பதற்கான கடிதம் பெற்றாலே நாம் இப்பகுதிக்கு அப்பொருட்களை கொண்டு வர முடியும். ஆனாலும் நாம் கொண்டு வரும் பொருட்கள் முதலில் அரச கட்டுப்பாட்டில் உள்ள தென் பகுதிகளுக்கே பிரித்து வழங்கப்படுகின்றன..

ஆனாலும் இங்கு வைத்திய தேவை அதிகமாக இருக்கின்றது என்பது வெளிப்படையான உண்மை. ஆகவே இனிவரும் காலங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் தொடர்பு கொண்டு நாம் வழங்கும் வைத்திய உதவிகள் இப் பகுதிகளுக்கு கிடைக்க ஏற்பாடுகளை செய்யவுள்ளோம்.

கொழும்பில் கண்வைத்தியர்களின் இறுதிப் பரீட்சைக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் வைத்திய நிபுணர்களில் நானும் ஒருவன். எனவே, இங்கு வைத்தியர்களை ஒருங்கிணைத்து இப்பகுதிக்கு சேவை வழங்குவது எனக்கு இலகுவாக இருக்கும். நிச்சயம் அவர்களும் எனது சேவைக்கு உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மொத்தத்தில் சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து இச் சேவைகளை தொடர்ந்து வழங்குவதில் இருக்கின்ற சகல சிக்கல்களையும் நிவர்த்தி செய்வது மிகவும் அவசியம். பின் தங்கிய நிலையில் உள்ள இம்மக்களுக்கு சேவையாற்ற விரும்புகின்றேன். இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என அன்பாகவும் உருக்கமாகவும் வேண்டு கின்றேன்..

செவ்வி:- தி.ஜெயக்குமார்
படப்பிடிப்பு:- வீ. பிரதீபன்

-பொது அமைப்பு வழங்கிய மருந்துப்பொருட்களை-

# அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மட்டும் விநியோகிக்க அரசு உத்தரவு!

**மட்டக்களப்பில் மிகமோசமான சுகாதார பற்றாக்குறை நிலவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காக அனுப்பப்பட்ட மருந்துப் பொருட்களை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் மட்டும் விநியோகிக்குமாறு சமூக சேவைகள் அமைச்சு உத்தரவிட்டுள்ளதாக வட அமைதிக்கான கரோலியனர்கள் என்ற அமைப்புத் தெரிவித்துள்ளது.**

கொழும்பு நகர லயன்ஸ் கழகத்தால் இந்த மருத்துவ நிவாரணப் பொருட்கள் கையேற்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட லயன்ஸ் கழகத்திற்கு அமைச்சரவை இந்த பணிப்புரையினை விடுத்துள்ளதாகவும் அமெரிக்காவைச் சேர்ந்த அமைதிக்கான வட கரோலியனர்கள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அமைப்பினால் அனுப்பிவைக்கப்பட்ட மருத்துவ நிவாரணப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களில் 54 கொள்கலன்களை மட்டுமே சமூக சேவைகள் அமைச்சு சுங்கத் தீர்வையினைச் செலுத்தி பொறுப்பேற்றுள்ளதாகவும் ஏனைய 168 கொள்கலன்கள் சுங்கத் தீர்வை செலுத்தப்படாத நிலையில் தேங்கிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் மிக மோசமாக சுகாதாரப் பற்றாக்குறை நிலவும் முகாம்களுக்கு விநியோகிப்பதற்காகவே தாங்கள் இந்த மருந்துப் பொருட்களை அனுப்பியதாகவும் ஆனால் இலங்கை அரசாங்கம் தமது விருப்பத்திற்கு மாறாக தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இவற்றை விநியோகிக்கத் தீர்மானித்துள்ளமை தமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும், அமைதிக்கான வட கரோலியனர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. (32)



புதுக்குடியிருப்பு பத்தாம வட்டாரம் கலாமன்றத்துக்கு அருகில் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் புதிதாகக் கட்டப்பட்ட பொதுக்கிணறு இன்றுவரை மக்களின் பாவனைக்கு விடப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் அதிகம் வசிப்பதால் இக்கிணறு அம்மக்களுக்குப் பெரிதும் உதவும் என எதிர் பார்க்கப்பட்ட போதிலும் இன்றுவரை அக்கிணறு எந்தவித பிரயோசனமும் அற்றநிலையில் உள்ளதையிட்டு அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் எடுத்து கட்டிய கிணற்றை மக்களின் பாவனைக்கு விட முன்வர வேண்டும் என மக்கள் எதிர் பார்க்கின்றனர். (படப்பிடிப்பு: க.தவரட்ணம்)

## முச்சக்கரவண்டி மரத்துடன் மோதியது பயணித்த இரு இளைஞர்கள் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 வீதியில் முறிகண்டிப்பகுதியில் ஏற்பட்ட வீதிவிபத்தொன்றில் இருவர் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி விபத்தானது நேற்று முன்தினம் மாலை இரண்டு மணியளவில் இடம்பெற்றது. கிளிநொச்சியிலிருந்து முறிகண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டி வேகமாக சென்றதால் சாரதியின் கட்டுப்பாட்டை மீறி முறிகண்டியை அண்மித்த பகுதியில் வீதியின் அருகில் நின்ற மரத்துடன் மோதியுள்ளது.

இதன்போது அம் முச்சக்கர வண்டியில் பயணித்த க.நிமால் யூலியன்(வயது-23) ஆ.சிறீகாந்தரூபன் (வயது-23) ஆகிய இருவருமே காயமுற்று மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்துப் பற்றிய மேலதிக விசாரணைகளை காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

## இராமநாதபுரத்தில் வீரமுரசு எழுச்சி நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு



(வட்டக்கச்சி)

இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும், வீரமுரசு கலைநிகழ்வும் கடந்த வெள்ளியன்று மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது. இராமநாதபுரம் கல்மடு நகர் வலயங்களுக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர், தளபதிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், போராளிகள் எனப் பலதரப்பட்டோர் இராமநாதபுரம் சந்தியிலிருந்து பாண்ட் வாத்தியத்துடன் இராமநாதபுரம் ம.விக்கு அழைத்துவரப்பட்டனர். அங்கு பொதுச்சுடரினை மூன்று மாவீரர்களின் தாயாரான திருமதி தில்லைநாயகமும், தேசியக்கொடியினை கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணனும் ஏற்றி வைத்தனர். அதனைத்தொடர்ந்து 2ஆம் லெப் மாலதியின் திருவுருவப்படத்திற்கு கிளி.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூவிழியும், கரும்புலி கப்டன் மில்லரின் திருவுருவப்படத்திற்கு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகமும், அங்கயற்கண்ணியின் திருவுருவப்படத்திற்கு கிளி.கோட்டப் பொறுப்பாளர் சிறியும், லெப். கேணல் திலீபனின் திருவுரு வப்படத்திற்கு தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் அருளும், கேணல் சங்கரின் திருவுருவப்படத்திற்கு கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் பசுபதிப்பிள்ளையும், குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் திருவுருவப் படத்திற்கு கிளி.மாவட்ட தொழிற் சங்கப் பொறுப்பாளர் வேங்கையனும் சுடரினை ஏற்றிவைக்க, மாவீரர்களின் படத்திற்கு மாவீரர்களின் பெற்றோர்கள் சுடர் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர்- பொன்.தியாகமும், தேசிய எழுச்சிப்பேரவைச் செயலர் பசுபதிப்பிள்ளையும், இராமநாதபுரம் ம.வி.முதல்வர் இரட்ணகுமாரும், மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழியும், வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் பொன்னுத்துரையும் நினைவு ரைகளை நிகழத்தினார்கள். கலை நிகழ்வுகளாக இராமநாதபுரம் ம.வி. மாணவர்களின் கவிதை நிகழ்வும், நவம் அறிவுக்கூடப் போராளிகளின் "இராகவேங்கைகள்" எனும் இசை நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதன்போது எழுபத்தைந்திற்கும் மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். (12)

## மக்களின் குடிநீர்த் தேவைக்கு ஐந்து பௌசர்கள் வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து மாமுனை தொடக்கம் கட்டைக்காடுவரை நலன்புரிநிலையங்களிலும், சொந்தவீடுகளிலும் குடியிருக்கும் குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கென நீர்ப் நிறுவனம் பருத்தித்துறைப் பிரதேசசபையின் செம்பியன்பற்று உபஅலுவலகத்திற்குத் தண்ணீர் பௌசர்களை வழங்கியுள்ளது. இதனால் இப்பிரதேசத்தில் தங்கியுள்ள மக்களுக்கு செம்பியன்பற்று உப அலுவலகத்தினால் ஐந்து தண்ணீர் பௌசர்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகின்றது. முதலில் பச்சிலைப்பள்ளிப்பிரதேச சபையிடமும், வேலணைப் பிரதேசசபையினிடமும் இருந்து ஒவ்வொரு தண்ணீர்ப் பௌசர்களைத் தற்காலிகமாக பருத்தித்துறைப்பிரதேசசபை வாங்கித்தான் இப்பகுதிக்குக் குடிநீரினை வழங்கிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (11)

## வவுனியா பொது வைத்தியசாலையில் இனந்தெரியாத ஆணின் சடலம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா பொது வைத்தியசாலையில் பிரேத அறையில் இனந்தெரியாத ஆணின் சடலம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி இயங்கராவூரைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை என்பவர் பூவரசங்குளம் பகுதியில் வீதியோரமாக மயங்கிய நிலையில் காணப்பட்ட ஆண் ஒருவரை எடுத்து வந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். இவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் இவர் இறந்து விட்டதாகத் தெரிவித்து வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்க உத்தரவிட்டனர்.

இவ்ஆணின் சடலத்தை இனங் காண்பதற்காக வவுனியாப் பொலிசார் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இன்று மரண விசாரணை மேற்கொள்ளப்படவுள்ள தாக வவுனியா திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் தெரிவித்துள்ளார். (10)

## பளைப் பிரதேசத்தில் 38 வீடுகள் அமைப்பு

பளைப் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களுக்கான தற்காலிக வீடுகள் அமைக்கும் வேலைகளை பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகம் தற்போது மேற்கொண்டு வருகிறது.

மாசார்க் கிராமத்தில் 31 வீடுகளும், புலோப்பளைக் கிராமத்தில் ஏழு வீடுகளுமாக 38 வீடுகளை அமைக்கும் நடவடிக்கைகள் போருட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பளை பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வருகிறது. (46)

## -பாராளுமன்ற உறுப்பினர்களின்- பாதீட்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் பாடசாலைகளுக்கு உபகரணங்கள்

(வவுனியா செய்தியாளர்)

பாராளுமன்ற உறுப்பினர்களின் 2004 ஆம் ஆண்டின் பாதீட்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் முருங்கன் பிரதேச பாடசாலைகளுக்கு உபகரணம் வழங்கும் வைபவம் கடந்த வெள்ளியன்று காலை 10.00 மணிக்கு முருங்கன் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் மன்/கற்கடந்தகுளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு 15 0000 ரூபா. பெறுமதியான பாண்ட் வாத்தியக் கருவிகளும் மன்/ சூரிய கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு 15 0000 ரூபா. பெறுமதியான பாண்ட் வாத்திக் கருவிகளும் மன்/இசைமாலைத் தாழ்வு பாடசாலைக்கு 50 000 ரூபா பெறுமதியான பாண்ட் வாத்தியக் கருவிகளும் முருங்கன் மத்திய மகாவித்தியாலயத்திற்கு 40 000 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன. (10)




புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவைச் சிறப்பிக்கும் முகமாக லண்டனில் உள்ள புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால், புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியில் ஒரு கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் கேட்போர் கூடக் கட்டுமானப்பணியையும் மற்றும் அவர்களால் அமைக்கப்பட்டுவரும் நுழைவாயிலின் முகப்பின் தோற்றத்தையும் படங்களில் காண்க. (படப்பிடிப்பு.க.தவரட்ணம்)

## தையல் பயிற்சியாளருக்கு சான்றிதழ் வழங்கல்


(ஒட்டுசுட்டான்)

கற்சிலை மடுவில் தையல் பயிற்சிகளை முடித்த யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற்றது.

கடந்த வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் கற்சிலைமடு அ.த.க பாடசாலையில் முல்லை மாவட்ட தேசிய இளைஞர் மன்ற அதிகாரி சண்முகவடிவேல் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி சுபாசினி கந்தையா சான்றிதழ்களையும் கருத்துரைகளையும் வழங்கினார்.

இதில் கிராம சேவையாளர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிநெறி பண்டார வன்னியன் இளைஞர் கழகத்தால் நடாத்தப்பட்டது. (05)






ஈராக்கில் அமெரிக்க படைகள் காலடிவைத்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதை முன்னிட்டு நேற்று ஈராக் போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் பொதுமக்கள் பேரணி நடத்துவதை முதலாவது படத்திலும் அமெரிக்காவின் சிக்காகோ நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது வீதியைவிட்டு அகல மறுத்த ஒருவரைப் பொலிசார் கைது செய்வதை இரண்டாவது படத்திலும் சீனாவில் சான்ஸி மாகாணத்தில் நேற்று முன்தினம் நிலக்கரிச்சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் பலியான ஒருவரின் உறவினர் கதறி அழுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# மேற்கு ஆசியாவின் எந்தப் பகுதியையும் தாக்கவல்ல ஏவுகணையை பாக்.பரிசோதித்தது

(இஸ்லாமபாத்)

**பாகிஸ்தான் நேற்று முன்தினம் இரண்டாயிரம் கிலோமீற்றர் தூரம் பாயக்கூடிய "சாகின்-2" என்ற ஏவுகணையை சோதித்துப் பார்த்தது. இரண்டுபகுதிகளைக் கொண்ட இந்த "சாகின்-2" ஏவுகணை அணுக் குண்டுகளை எடுத்துச் செல்லக்கூடியதாகும்.**

ஏவுகணைச்சோதனை வெற்றிகரமாக நடந்ததாக பாக். ராணுவத்தின் செய்தித்தொடர்பாளர் மேஜர். ஜெனரல் சவுகத் சுல்தான் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் ஏவுகணைச்சோதனையை பாக்.அதிபர் முஷாரப் நேற்று முன்தினம் நேரில் பார்த்தார். சோதனை முடிந்தவுடன் பாக்.விஞ்ஞானிகளை அழைத்து அவர் பாராட்டினார் பாகிஸ்தான் அதன் ஏவுகணைகளை நவீனப்படுத்த தொடர்ந்து பாடுபடும் என்று அவர் கூறினார்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் ஏவுகணைச்சோதனை நடத்தவிருந்தால் அது பற்றி முன்கூட்டியே பரஸ்பரம் தகவல் தெரிவிக்கவேண்டும். என்ற ஒப்பந்தம் நடைமுறையிலுள்ளது. அதன்படி ஏவுகணைச்சோதனை குறித்து பாக். அதிகாரிகள் இந்திய அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் முன்கூட்டியே தகவல் தெரிவித்துவிட்டு ஏவுகணைச் சோதனை நடத்தினர்.

பாக். சோதித்த ஏவுகணை இந்தியா மற்றும் மேற்கு ஆசியாவின் எந்தப் பகுதியையும் குறிவைத்துத் தாக்கக் கூடிய அளவு சக்தியுடையது ஆகும். பாகிஸ்தான் ஏற்கனவே "அட்ப்-4" என்ற ஏவுகணையை ஏவி சோதனை நடத்தியுள்ளது. அந்த "அட்ப்-4" ஏவுகணையின் மெரு கூட்டப்பட்ட வடிவமே "சாகின் -2" எனக் கருதப்படுகின்றது. இந்த ஏவு கணை இந்தியாவின் "அக்னி -2" ஏவுகணைக்கு இணையானதாகும்.

பாகிஸ்தான் கடந்த 1998ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் தொடங்கி பல்வேறு ஏவுகணைச்சோதனைகளை நடத்திவருகிறது. அதனிடம் குறுந்தொலைவு,நடுத்தர வீச்சு மற்றும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் பலரகமான ஏவுகணைகள் உள்ளன.

பாக்.விஞ்ஞானி ஏ.கி.யூகான் அணுவாயுத ரகசியங்களை ஈரானுக்கு அளித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள தருணத்தில் பாக். இந்த ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது. அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலிசா ரைஸ் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் முடித்துள்ள நிலையில் பாக். ஏவுகணைச் சோதனை நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கொலம்பியா விண்கல விபத்தில் உயிர் தப்பிய நுண்புழுக்கள்

கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறியதில் உயிருடன் தப்பிய நுண்புழுக்களைக் கொண்டு எதிர்காலத்தில் விண்வெளி வீரர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசாவால் அனுப்பப்பட்ட கொலம்பியா விண்கலம் 2003 பெப்ரவரி முதலாம் திகதி விண்ணில் வெடித்துச் சிதறியது. அதில் பயணம் செய்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உள்ளிட்ட ஏழு விண்வெளி வீரர்கள் மரணமடைந்தனர். ஆனால் விண்கலத்தில் ஆராய்ச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட நுண்புழுக்கள் பாதிக்கப்படவில்லை அப்புழுக்கள் வைக்கப்பட்டிருந்த சிறிய பெட்டிகள் விபத்து ஏற்பட்டு மூன்று மாதங்கள் கழித்துக் கண்டெடுக்கப்பட்டன. அதில் இருந்த புழுக்கள் உயிருடன் இருப்பது தெரிய வந்தது. அப்புழுக்கள் தப்பியதற்குக் காரணங்களைக் கண்டறிந்து விண்வெளி வீரர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர். பூமியில் வீழ்ந்தபோது ஏற்பட்ட அதிர்ச்சியையும் தாங்கிப் புழுக்கள் உயிருடன் உள்ளன. புழுக்கள் வைக்கப்பட்டிருந்த சிறிய பெட்டிகள் பாதுகாப்பு உறை போல் செயற்பட்டதால் புழுக்கள் உயிருடன் தப்பியதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். எனவே விண்வெளிப் பாதுகாப்பு உறையை வீரர்களுக்கு அணிவிப்பதன் மூலம் அவர்கள் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்தலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## ஜப்பானில் நேற்று நிலநடுக்கம் கட்டடங்கள் சேதம்;போக்குவரத்து ஸ்தம்பிதம்

ஜப்பானில் நேற்றுக் காலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ஜப்பான் நாட்டின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள கியூசூ தீவில் சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு கோலில் ஏழு புள்ளிகள் பதிவாகியிருந்தது. யுகுஓகா நகரில் தொடர்ந்து 30 நொடிகள் அதிர்வு ஏற்பட்டது. இதனால் வீடுகள் கட்டடங்கள் மற்றும் கடைகள் இடிந்து விழுந்தன. பல இடங்களில் விரிசல் நிலத்தில் ஏற்பட்டது.

தெருவிளக்குகள் கீழே விழுந்து நொருங்கின. நிலநடுக்கத்தின் காரணமாக உள்ளூர் மற்றும் புல்லட் ரெயில் போக்குவரத்து ரத்துச் செய்யப்பட்டது. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. யுகுஓகா நகரின் விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது. நிலநடுக்கத்தால் 50 செ.மீ உயரத்திற்குக் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது.

இதையடுத்து கடற்கரைப் பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் பாதுகாப்பான பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டு இருக்கிறார்கள். கடலில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. ஜப்பானை நிலநடுக்கம் தாக்கிய நேரத்தில் தென்கொரியாவில் உள்ள பியுசன் நகரிலும் அடுத்தடுத்து இரண்டு முறை நில நடுக்கம் ஏற்பட்டது. முதல் முறை ரிச்டர் அளவு கோலில் நான்கு, புள்ளியாகவும், இரண்டாவது முறை ஆறு புள்ளியாகவும் பதிவானது. இதனால் தொடர் அதிர்வுகள் ஏற்பட்டன. கட்டடங்கள் மற்றும் வீடுகள் அதிர்ந்தன. இங்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து எந்தத் தகவலுமில்லை.



## பாக்.மசூதியில் குண்டுவெடிப்பு 35 பேர் பலி, 100 பேருக்குக் காயம்

### -மசூதியின் பெரும்பகுதி இடிந்து வீழ்ந்தது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் நசீமாபாத் நகரில் மசூதி ஒன்றில் தொழுகை நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை இடம் பெற்ற குண்டு வெடிப்பில் முப்பத்தைந்து பேர் உடல் சிதறிப்பலியாகியுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். மசூதியின் பெரும்பகுதி இடிந்து வீழ்ந்துள்ளது. மசூதி வளவில் இரத்தம் தோய்ந்த உடற்பாகங்கள் சிதறிக்கிடந்தன.

இந்தத் தாக்குதலுக்கு எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. என்றாலும், சன்னி பிரிவைச் சேர்ந்தவர்கள் இதில் சம்பந்தப்பட்டு இருக்கலாம் அல்லது பின்லேடனின் அல்-ஹைதா இயக்கத்துடன் தொடர்பு உள்ள "லக்ஸர் இ ஜாங்க்வி' என்ற இயக்கம் காரணமா? என்று பொலிசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த வெடிகுண்டுத் தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தானில் பல்வேறு நகரங்களில் பதட்டம் உருவாகியுள்ளது. பாகிஸ்தானில் ஷியா முஸ்லிம்களுக்கும் சன்னி பிரிவு முஸ்லிம்களுக்கும் இடையே அடிக்கடி மோதல் நடைபெற்று வருகிறது.

15 கோடி மக்கள் தொகை கொண்ட பாகிஸ்தானில் 80 சதவீதத்தினர் சன்னி பிரிவினர். 17 சதவீதத்தினர் ஷியா பிரிவினர் ஆகும்.



அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஆண்டுதோறும் விவசாயிகள் திருவிழா கொண்டாடப்படுகிறது. இந்த விழாவின்போது விவசாயக் கண்காட்சி மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தற்போது இந்தத் திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இதை முன்னிட்டு பன்றி களுக்கான தடை தாண்டும் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. அப்போது பன்றிகள் ஒன்றோடோன்று போட்டிபோட்டு ஓடின. படத்தில் நான்கு பன்றிகள் தடுப்புகளைத தாண்டி வேகமாக ஓடி வருவதைக் காணலாம்.

# சிறிலங்கா ஆளும் தரப்பின் நம்பிக்கைக்குரியவர்களுக்கு ஆபத்து!

"வசியக்காரன் மடிந்தான்" என்பது சிங்களபுராண நாடகமாகும். அதே நாடகம் தற்போதும் அரங்கேறும் நிலையுள்ளது. ஆயினும் அது பிரபல அரங்குகளில் அன்றி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசாங்கத்தினுள்ளாகும்.

இந்த நாடகத்தின் கதாநாயகனாக மங்கள சமரவீர காணப்படுகிறார். அவரே கூட்டணி அமைய வசியமந்திரம் செய்தவர். அடுத்தவர் ஜே.வி.பி யின் விமல்வீரவன்சவாகும். இவர்கள் இருவருமே வசிய மந்திரக்காரர்களாவார். ஆயினும் இருவருக்கும் இப்போது கழுத்தில் கத்திவைக்கப்பட்டுள்ளது. ஏன் அந்த நிலைக்குள்ளானார்கள் என்பதை அறிய முதல் அவர்கள் இருவரையும் பற்றி சற்று நோக்குவோமானால்,

கூட்டணி அமைக்க வசியம் செய்யமுதல் மங்கள சமரவீர சந்திரிகாவின் வீட்டு அமைச்சரவையில் இருந்தார். அப்போது சந்திரிகா அரசியலில் எந்தமுடிவுக்கு வந்தாலும் சமரவீரவின் சிபார்சாகவே அது இருக்கும். சமரவீரவுக்குத் தெரியாமல் எந்த நடவடிக்கையையும் சந்திரிகா எடுக்கவில்லை.எனினும் சமரவீரவை சந்திரிகா சந்தேகத்துடனேயே நோக்கி வந்தார். முதலில் ஜே.வி.பி யுடன் இணைந்து கூட்டணி அமைக்க சமரவீர கொண்டுவந்த யோசனையைச் சந்திரிகா நிராகரித்தார். அவர் ஜே.வி.பி யுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவைத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஒழித்துக்கட்ட சமரவீர திட்டமிடுகிறார் என்று சந்திரிகா நினைத்தார். சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் உள்ள மங்களவின் எதிரிகளும் சந்திரிகா வின் கருத்துக்கு உடன்பாடு தெரிவித்தனர். காரணம் அவர்கள் சந்திரிகாவை விட ஜே.வி.பி யினரிடம் கொண்டிருந்த அச்சமாகும்.



விமல்வீரவன்ச

எனினும் கூட்டணி அமைத்ததும் நிறைவேற்றதிகார சனாதிபதி முறையை நீக்கிவிட்டு சந்திரிகா தொடர்ந்து அரசியலில் ஈடுபடும் வழியையும் ஏற்படுத்தப்போவதாக மங்கள உறுதியளித்தார்.

ஆயினும் கூட்டணி அமைத்துத் தேர்தலில் நின்று முடிவுகள் வெளிவந்த பின்னரே சந்திரிகாவுக்கும், அவரது சுதந்திரக் கட்சிக்கும் உலகம் இருண்டமை தெரியவந்தது. அதாவது அந்தக் கட்சிக்குக்கிடைக்க வேணடிய 39 தொகுதிகளின் வெற்றி ஜே.வி.பி யினர் வசமானதாகும். மங்கள என்ற வசியக்காரன் முடிவுக்கு வர ஆரம்பித்தது அன்றிலிருந்தே. தேர்தலில் வெற்றிபெற்றாலும். தாம் தோற்றுவிட்டதை எண்ணி வருத்தப்பட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் சிலர் மங்கள செய்த வசியமந்திரமே காரணமென உணர்ந்தனர். அத்துடன் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக வந்ததும் தமக்கு சனாதிபதிப் பதவியிலேயே நீடிக்கவேண்டி ஏற்பட்டதும், பாராளுமன்றத்தில் ஜே.வி.பி யின் ஆதிக்கம் மேலோங்கவும் காரணமாக அமைந்தது மங்கள சமரவீரவின் வசியமந்திரமே என்பதை சந்திரிகாவும் உணர்ந்துகொண்டார். அதனால் கட்சியும், சந்திரிகாவும் உணரத் தொடங்கியதும் மங்கள சமரவீர ஓரங்கட்டப்பட்டார். அது எவ்வாறெனில் தற்போது சந்திரிகா என்ன செய்கிறார் என்பதும் கட்சிக்குள் என்ன நடக்கிறது என்பதும் மங்களவுக்குத் தெரியாமலுள்ளது. ஆயினும் சந்திரிகா அரசியலில் நீடித்தால் தனது அரசியல் வாழ்வும் பாதுகாக்கப்படும் என்ற சிந்தனையில் மங்கள தற்போது நிறைவேற்று அதிகார சனாபதிமுறையை நீக்கும் வழியை ஆராய்ந்து வருகிறார்.

இது இவ்வாறிருக்க ஜே.வி.பி தரப்பில் அன்று கூட்டணி அமைப்பதில் மும்முரமாக ஈடுபாடுகாட்டிய விமல்வீரவன்சவுக்கும் மங்கள சமரவீரவின் நிலையே உருவாகியுள்ளது. ஜே.வி.பி தலைவர் றோகண விஜேவீரவுக்குப்பிறகு கட்சியின் நட்சத்திர நாயகனாக விளங்கியவர் இவராகும். காரணம் அவரது பிரச்சாரமாகும். அந்தப் பிரச்சாரத்தின் உதவியுடனேயே சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் ஜே.வி.பி.கூட்டணி அமைத்தது. அதன் ஒரு வெற்றியாகவே 39 ஆசனங்களில் ஜே.வி.பி வெற்றிபெற்றது. வெற்றிக்குக் காரணம் விமல் வீரவன்சவின் பிரச்சாரம் என்பதையும் கட்சி உணர்ந்தது.

எனினும் ஜே.வி.பி சந்திரிகாவின் அரசு பதவியேற்றதும். அமைச்சுப் பதவிகளைப் பகிரும்போதே கருத்து முரண்பாட்டைக் காட்டியது. அதுபோல சந்திரிகா அன்று தொடக்கமே தனது அதிகாரத்தைக் காட்டத் தலைப்பட்டார். அதனால் ஜே.வி.பி தனது அதிகாரத்தைக் காட்டமுடியாமல் சந்திரிகாவின் அதிகாரத்திற்குட்பட்டது. இது விமல்வீரவன்சவினால் ஏற்பட்ட முடிவு என ஜே.வி.பி உணரத்தொடங்கியது. எனினும் விமல்வீரவன்ச 39ஆசனங்களைக் கட்சி பெற்றிருப்பதால் சந்திரிகாவின் அதிகாரத்திற்குக் கட்டுப்படத் தேவையில்லை எனக் கூறினார். அவ்வாறு கூறிக்கொண்டு சந்திரிகாவின் அரசியல் நடவடிக்கைகளுக் கேற்பவே செயற்பட்டு வந்தார். எனினும் கட்சி இதனை அனுமதிக்க மறுத்தது. இதனால் சந்திரிகாவுடன் தொடர்பை வைக்க கட்சி வேறொருவரை நியமித்திருக்கலாம்.

எனவே ஜே.வி.பி யின் வசியக்கரரான விமல்வீரவன்சவின் முடிவுக்காலமும் ஆரம்பித்துள்ளது. ஆயினும் விமல்வீரவன்ச இதற்குப் பரிகாரம் தேடமுற்படுவதுபோன்றும் குறைந்துவரும் தனது செல்வாக்கைப் பா[illegible]காக்கும் நோக்குடனும் சந்திரிகாவை [illegible] வகையில் திட்டுவது போல நடந்துகொண்டுள்ளார். அத்துடன் தேசப்பற்று இயக்கத்தினூடாக மீண்டும் கட்சிக்குள் செல்வாக்கைப் பெறவேண்டி ஏற்பட்டுள்ளது. சந்திரிகாவுடன் தொடர்பு வைத்திருப்பது போன்று அவரைத்தாக்கிப்பேசவும் தமதுபிரச்சாரம் இன்றியமையாதது ஒன்று என கட்சிக்கு உணர்த்தவேண்டும் போல் அவருக்குள்ளது.

அந்தவகையிலேயே நோர்வே அரசையும், உலவங்கிப்பிரதிநிதி பீற்றர்ஹரோல்டையும் விமர்சித்து ஊடகங்கள் மூலம் அதனைப் பெரிதுபடுத்தியுள்ளார். ஆயினும் விமல்வீரவன்சவினதும், மங்கள சமரவீரவினதும் வசியம் தற்போது செல்லுபடியற்றதாகவே காணப்படுகிறது. என்றாலும் அவர்களுக்குப் பதிலாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் டிலான்பெரேராவும், ஜே.வி.பி யின் நந்தனகுணதிலக்கவும் அந்த வசியமந்திரப் பணியைக் கொண்டுசெல்ல ஆரம்பித்துள்ளனர். எனினும் விமல்வீரவன்சவுக்கும், மங்கள சமரவீரவுக்கும் அவரவர் கட்சிக்குள் இடமில்லை என்றும் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இவர்களின் வசியமந்திரமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மங்கள சமரவீர சந்திரிகா சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்த பின்னரேயே அவருடன் இணைந்தார். அதுவரை அநுராவுடன் வால்பிடித்தார். ஆயினும் டிலான் பெரேரா தொடர்ந்தும் சந்திரிகாவின் பின்னாலேயே சுற்றியவராவார். அது சந்திரிகாவுக்கும் தெரியும். அதனால் மங்களவைவிட டிலான் நம்பிக்கைக்குரியவராவார்.

சந்திரிகாவைப்போன்றே டிலான்பெரேராவும் அன்று ஜே.வி.பி யின் அச்சுறுத்தலுக்குளளான ஒருவராவார். அன்று 1988 மாகாண சபைத்தேர்தலின்போது இவர் மக்கள் கட்சி சார்பாகப் போட்டியிட்டது இனந்தெரியாத ஜே.வி.பி யினரின் துப்பாக்கி முனையிலேயே. எனினும் அதற்குப் பயப்படாது ஜே.வி.பி யின் துப்பாக்கிக் கலாச்சாரத்திற்குச் சவால்விட்டு வெற்றிபெற்றார். எனினும் 2004ஆம் ஆண்டு தேர்தலின்போது மங்களவுடன் இணைந்து கூட்டணி அமைத்து ஒத்துப்பாடினார். இதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஒழிக்க டிலான்பெரேரா முக்கிய நபரென ஜே.வி.பி.கருதியது. அதனால் அவரை உச்சிக்கொப்பில் ஏற்றியது.

ஆனால் இன்று அவரையே ஜே.வி.பி தாக்கிப் பேச[illegible]ன்றது. காரணம் தமது காரியம் நிறைவேறவில்லை என்பதும். சிறிலங்கா சுதந்திரக்கட்சி[illegible] பாதுகாக்கும் பொறுப்பை டிலானிடம் சந்திரிகா ஒப்படைந்துள்ளமையுமாகும். இதனால் மங்கள ஓரங்கட்டப்படும் நிலை தோன்றியிருக்கின்றது. இதுபோன்று விமல்வீரவன்சவுக்குப் பதிலாக நந்தனகுணதிலக்க பிரபல்யம் பெற ஆரம்பித்துள்ளார்.நந்தன ஜே.வி.பி யின் கிளர்ச்சிக் கலாச் சாரத்தின் போதிருந்தே செயற்பட்டு வருகிறார். இவர் விமல்வீரவன்சவைப் போன்று ஊடகங்களின் மூலம் பிரபல்யம் பெற்றவரல்ல. அவர் கட்சியில் ஆற்றிய சேவை நடவடிக்கை என்பவற்றின் மூலமே பிரபல்யமானார். அதனால் கட்சி அவரை நம்பியது. அவர் பணியாற்றியது கட்சியின் தேவைப் படியே.

அரசாங்கம் பதவியேற்று அமைச்சுப்பதவி வழங்கும்போது ஏற்பட்ட முறுகல் நிலையில் இவர் விடாப்பிடியாக நின்றார். ஐ.தே.கட்சியின் ஜே.வி.பியை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட்டவேளை இவர் பலமாகத் தாக்கப்பட்டார். அதனால் ஐதேகட்சி மீதும் இவர் தீராத வைராக்கியத்தைக் கொண்டிருக்கிறார். எனினும் அதனால் சந்திரிகா அரசைக்காட்டிக் கொடுக்க விரும்பவில்லை. இதனடிப்படையில் தற்போது சந்திரிகாவுக்கு டிலான்பெரேராவும், ஜே.வி.பிக்கு நந்தனகுணதிலக்கவும் புத்துயிர் அளிக்கும் அல்லது கூட்டணியைப் பாதுகாக்கும் புதிய காவலர்களாக உருவாகியுள்ளனர். இதன் காரணமாக முன்னைய காவலர்களாகவும், வசியக்காரர்களா கவும் இருந்த மங்கள சமரவீரவினதும், விமல் வீரவன்சவினதும் அரசியல் கழுத்துக்குகத்தி பாய்ச்சப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.



மங்களசமரவீர

**உப்புள் ஜோசப் பர்னாந்து**
**(லங்காதீப)**
**தமிழில்-வடிவேல்**

# நியாப் ஒன்றின் குறைவேலைகளை விரைவாக முடிவுறுத்த அழைப்பு

(ஒட்டுசுட்டான்)

நியாப் திட்டம ஒன்றின் மையக்கிராமங்கள், குளங்கள் கடன்வழங்கப்பட்டமையினை கணக்காய்வும், திட்டங்களின் செயற்பாட்டை ஆராய்தலும் தொடர்பாக கலந்துரையாடல் ஒட்டுசுட்டான் நியாப்திட்டப்பணிமனையில் கடந்த வெள்ளியன்று முற்பகல் 11.00 மணியளவில் எந்திரி எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் எந்திரி சிவகுமார் கருத்துத் தெரிவிக்கையில்; நியாப் ஒன்றிற்கான வேலைத்திட்டங்கள் முடிவுறும் நிலையில் எத்தனையோ வேலைத் திட்டங்கள் அரை குறையாகவும், சிறு வேலைகள் செய்யப்படாமலும் உள்ளதால் ஒரு சில திட்டங்களின் நிதிகள் திரும்பிச் செல்லக்கூடிய அபாய நிலையிலுள்ளது. எனவே வேலைத் திட்டங்களைப் பொறுப்பெடுத்த ஒப்பந்தக்காரர்கள் மிகவிரைவாக முடித்தால் அடுத்தகட்ட வேலைகளை நகர்த்தமுடியும். மேலும நடைபெற்ற திட்டங்களுக்கான பரா மரிப்புக் கொடுப்பனவு மூன்று மில்லி யனுக்கு மேலாகவுள்ளது எனவே இதை எல்லோரும் கருத்தில் எடுத்துக் கொண்டு மக்களுக்கு விரைவாக செனறடையக் கூடியவகையில் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம் கருத்துக் கூறுகையில்; முல்லை மாவட்ட பெரும்பகுதி விவசாயக்கிராமங்களையே கொண்டுள்ளது. ஆகையினால் தான் நியாப்திட்டமானது மிக அடித்தளத்திலிருந்து அதன் செயற்பாடுகளைச் செய்கின்றது. எனவே ஒவ்வொரு கிராம அமைப்புக்களாக இருந்தாலும் சரி, பொதுமக்களாக இருந்தாலும்சரி எனது கிராமம் நான் போய்வரும் வீதி, தொழில்செய்யும் இடம் என சிந்தித்து கிராமத்தை வலுப்படுத்த முன்வரவேண்டும் இல்லையேல் எமது இனம் அபிவிருத்திப்பணியில் பின்னடையக்கூடிய சாத்தியங்கள் உண்டு. ஆகவே எல்லோரும் கூட்டுமுயற்சி மூலம் இணைந்தால்தான் கிராமத்தை, நகரத்தை வலுப்படுத்த முடியும் என்றார்.

இக்கருத்துரையாடலில் தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிநிதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை.மாவட்டப் பொறுப்பாளர் அணி அழகன், முல்லை. மாவட்ட நிர்வாக சேவைப்பொறுப்பாளர் முரளி ஆகியோர் கருத்துக்களை வழங்கினர்.

இதில் மூன்றிற்கும் மேற்பட்டமையக்கிராமங்களைக் கொண்ட பிரதிநிதிகள், கமக்கார அமைப்புக்கள், கிராம முன்னேற்ற சங்கங்கள் என்பவற்றைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். (05)

# வீதியொழுங்கைக் கடைப்பிடிக்காத ஐம்பது பேர் மீது சட்ட நடவடிக்கை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் காவல்துறையினர் வீதிஒழுங்குகள் விடயத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த வெள்ளிக்கிழமை வீதியால் சமாந்தரமாகச் சென்று வீதி ஒழுங்கை மீறியவர்கள் ஐம்பது பேர் வரை புதுக்குடியிருப்பு நீதிமன்றில் முற்படுத்தி தண்டப்பணம் அறவிடப்பட்டு, நீதியாளரால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்குமாறும், அதன் மூலம் போக்குவரத்துக்கு உதவுமாறும் புதுக்குடியிருப்பு காவல்பணிமனைப் பொறுப்பாளர் மக்களைக் கேட்டுள்ளார்.

# குடியிருப்புத்திட்ட வீடுகள் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

ரகுபதி குடியிருப்புத்திட்ட வீடுகள் கையளிப்பு நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு புத்தூர்ச்சந்தி புளியங்குளத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பெற்ற ரகுபதி குடியிருப்புத்திட்ட வீடுகள் கையளிப்பு நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் மாவீரர், போராளி குடும்ப நலன் காப்பகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

**10.** புதிய பொருளாதாரக் கொள்கையின்படி வேலை நேரத்தை 35 மணி நேரத்திலிருந்து அதிகப்படுத்தும் அரசின் முடிவை எதிர்த்து பிரான்சில் போராட்டம்.

☞ ஈராக்கின் மொசூல் நகரில் மரணச் சடங்கு நிகழ்வில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 47 பேர் உடல் சிதறிப் பலி, 90 இற்கும் அதிகமானோர் காயம்.



☞ அவுஸ்திரேலியாவின் வடகிழக்குக் கடற்கரைப் பகுதியில் மணிக்கு 230 கிலோ மீற்றர் வேகத்தில் பாரியசக்தி வாய்ந்த புயற்காற்று வீசியது. இதனால் குயின்ஸ் லாந்து தீவில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புக் காரணமாக வெளியேறினர்.

☞ செச்சினியாவின் தலைநகர் குரொல்னியில் பறந்து கொண்டிருந்த ரஷ்ய எம்.ஐ எட்டு ஹெலிகப்டர் மின்சாரக் கம்பமொன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் 14 ரஷ்ய வீரர்கள் பலி. மேலும் இருவர் படுகாயம்.

☞ ஆர்ஜென்டினா தலைநகர் பியூனோஸ் ஜரிஸஸ் நகருக்கு ஒதுக்குப்புறமாகவுள்ள ரயில் நிலையமொன்றில் இரு ரயில்கள் மோதிக் கொண்டதில் 129 பேர் காயமடைந்தனர்.

☞ பாகிஸ்தானின் வடக்கிலுள்ள கராச்சி நகரில் கடற்படைக்குச் சொந்தமான "பி.என்எஸ்-மொவாவின்" என்ற கப்பல் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்புக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது தீப்பிடித்ததில் 6 பேர் பலி,95 பேர் படுகாயம்.

☞ இஸ்ரேலிய படையினர் மேற்குக்கரை நகரில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை ஒன்றில் பலஸ்தீனியர் ஒருவர் பலி, கொல்லப்பட்ட நபர் கடந்தமாதம் டெல் அவிவ் நகரில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கு உதவினார் எனக் கருதப்படுகின்றது.

**11.** அமெரிக்காவில் பிரியன் நிகோலஸ் என்ற கைதி நீதிமன்றத்தில் நீதிபதி உட்பட இரண்டுபேரைக் கொன்றுவிட்டு வேறு சில அலுவலர்களையும் பிணையாளிகளாகப் பிடித்தார்.

☞ தமிழ்நாடு குமரி மாவட்டத்தில் கடலலை 25 அடி உயரத்திற்கு எழுந்து சுமார் அரைக் கிலோ மீற்றர் தூரம் ஊருக்குள் சென்றது.

☞ ஜார்க்கண்ட் மாநில முதல்வராகப் பதவியேற்ற சிபுசோரன் தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

பிலிப்பைன்ஸ் மணிலாவில் அமெரிக் கத் தூதரகத்திற்கு அண்மையாக அமெரிக்கப் படையினர் ஈராக்கில் நிலைகொண்டிருப்பதை எதிர்த்துப் பிலிப்பைன்ஸ் முஸ்லிம் பெண்கள்ஆர்ப்பாட்டம்



**12.** தாய்லாந்தின் தாக் மாகாணத்திலுள்ள பூமிபால் விமான நிலையத்தில் தனியா ருக்குச் சொந்தமான விமானம் விபத்துக் குள்ளானதில் மூவர் பலி.

☞ இந்தியாவின் குஜராத் மாநிலம் அகமதாபாத் அருகே உள்ள டாக்கார் நகரில் பஸ் ஒன்று கால்வாய் ஒன்றிற்குள் கவிழ்ந்ததில் 27 பேர் பலி, பலர் காயமடைந்தனர்.

**13.** அமெரிக்காவின் விஸ்கோஸ்சின் மாகாணத்திலுள்ள புரூக்பீல்டு நகரின் ஷொரட்டன் ஹோட்டலிலுள்ள ஒரு அறையில் கிறிஸ்தவ ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றபோது திடீரெனக் கூட்டத்தில் புகுந்த ஒருவர் திடீரென்று துப்பாக்கியினால் சுட்டதில் ஒரு பெண் இரண்டு சிறுவர்கள் உட்பட ஏழுபேர் பலி. பின்னர் கொலையாளியும் தன்னைத்தானே சுட்டுக்கொலை செய்தார்.




## கடந்த வாரத்தில்

## 10.03.2005-16.03.2005

☞ சீன சனாதிபதியான ஹூஜிந்தாவு அந்நாட்டு இராணுவத்தின் தலைமைத்தளபதியாக மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**14.** ஈராக் தலைநகர் பாக்தாத் மற்றும் ஹலா நகருக்குகிடையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு பாதுகாப்பு வழங்கியவர்கள் மீது நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் இருவர் பலி.




☞ அந்தமான் நிக்கோபார் தீவின் தெற்குக் கரையோரம் கிரேட் நிக்கோபார் அருகே நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.6 புள்ளியாகப் பதிவாகியது.

☞ ஈரானின் தென்பகுதியிலுள்ள சிஸ்டான்-பலுசீசிஸ்தான் மாநிலத்தில் சரவண்நகர் அருகே நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.9 புள்ளியாகப் பதிவாகியுள்ளது.

☞ ஜப்பான்,கொரியா இடையே கடல் பகுதியில் டோக்டோவிற்கு ஜப்பான் உரிமை கொண்டாடுவதைக் கைவிட வேண்டும் எனக்கோரி சியோலிலுள்ள ஜப்பான் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதன்போது இரண்டு பேர் தமது கைவிரல்களைக் கத்தியால் வெட்டி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

☞ தென்கொரிய கடற்படையுடன் இணைந்த பயிற்சிக்காக தென்கொரியாவின் புசான்துறை முகத்திற்கு அமெரிக்கக்கப்பலும் கடற்படையினரும் வருகை.



☞ இந்தியாவின் கர்நாடகம், கோவை,மராட்டி ஒரிசா ஆகிய மாநிலங்களில் நள்ளிரவில் நிலநடுக்கம் ஏற்பட்டவேளை மக்கள் அவ்விடங்களை விட்டு வெளியேறினர்.



☞ லெபனானின் முன்னாள் பிரதமர் ரபீக்ஹரிரியின் படுகொலைச் சம்பவத்தின் ஒரு மாதகால நிறைவையொட்டி லெபனானின் சிரிய எதிர்ப்பாளர்கள் மத்திய பெய்ரூட்டில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.




**15.** சீனாவின் ஹூலாங்ஜியாஸ் மாகாணத்தின் குதைகி எனுமிடத்தில் நிலக்கரிச்சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் கட்டட இடிபாடுகளுக்கிடையே சிக்கி 16 பேர் பலி. ஆறுபேர் காணாமல் போயுள்ளனர்.

☞ ஜார்க்கண்ட் மாநில சட்டசபையில் முதல மைச்சர் ஆர்ஜன்முண்டா தலைமையிலான அரசாங்கம் மீது நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் ஆதரவாக 40 பேரும், எதிராக 37 பேரும வாக்களித்ததால் பி.ஜே.பி தலைமையிலான அரசாங்கம் வெற்றி பெற்றது.

☞ வட கிழக்குக் கென்யாவின் மன்டேரா மாகாணத்தில் ஏற்பட்ட சாதிக்கலவரத்தில் 30 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

☞ அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலிசா ரைஸ் இந்தியாவிற்கு விஜயம்.



☞ லெபனானின் உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதை எதிர்த்து சிரியா வுக்கு ஆதரவான மாணவர்கள் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் அமைந்துள்ள அமெரிக்க தூதுவராலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**16.** பாக்தாத்தின் அதியுயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் குண்டு வெடிப்பு.



☞ ரஷ்யாவில் எண்ணெய் நிறுவனத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற ஏ.என்.49 விமானம் பராண்டே எனுமிடத்தில் தீப்பிடித்து விபத்துக்குள்ளானதில்49 பேர் பலி.

☞ மேற்குக்கரை நகரான ஜெரிக்கோவின் பாதுகாப்புப் பொறுப்பை பலஸ்தீன நிர்வாகத்திடம் இஸ்ரேலிய அரசு ஒப்படைத்தது.

☞ ஈராக் பொதுத்தேர்தல் நடைபெற்ற ஆறுவாரங்களின் பின்னர் புதிய நாடாளுமன்றம் கூடியது.



# இன்று திறப்பு விழா

குமா சிறுவர்பூங்கா திறப்பு விழா இன்று பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் நடைபெறவுள்ளது.தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் சிறுவர்கல்வி ஊட்ட மேம்பாட்டுப் பணியினரால் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற மேற்படி குமா சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்படவுள்ளதுடன் அலுவலகம், வகுப்பறை, ஓய்வுகூடம், பராமரிப்பு மண்டபம் என்பனவும் வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# இலங்கையில் இரண்டு இராணுவம், இரண்டு கடற்படை இருக்க முடியாது

## -அமைச்சர் கதிர்காமர் கூறுகிறார்

இலங்கையில் இரண்டு இராணுவம், இரண்டு கடற்படை என்பன இருக்க முடியாதென வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.சமஷ்டி முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் போது அது அனைத்துத் தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவே இருக்க வேண்டும். எந்த ஒரு தரப்பின் மீதும் சமஷ்டி தீர்வைத் திணிக்க முடியாது என்றும் கூறினார்.இங்கிலாந்தில் முரண்பாட்டு கற்கை நிலையத்தில் நடைபெற்ற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பாதுகாப்புக் கொள்கை தொடர்பான கருத்துரையில் கதிர்காமர் இதனைத் தெரிவித்துள்ளார்.விடுதலைப்புலிகளிடம் விமானப்படை இருப்பது இலங்கைக்கு மட்டுமன்றி ஏனைய நாடுகளுக்கும் பாதகமானது என்றும், இது குறித்து அயல் நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். (32)

# கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

ஆள் அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் கடமைநேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

787913342V எனும் இலக்கமுடைய சுப்பிரமணியம் சசீகலா ஜெயபுரம், பல்லவராயன்கட்டு என்பவருடைய அடையாள அட்டையே கண்டெடுக்கப்பட்டுள்ளது. (கு)

# ஆளுநர் கூட்டிய மாநாட்டை பாராளு. உறுப்பினர்கள் புறக்கணிப்பு

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ நேற்று முன் தினம் மட்டக்களப்பில் ஏற்பாடு செய்திருந்த சுனாமி நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகள் தொடர்பான உயர்மட்ட மாநாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணித்தனர்.

கடந்த மாதம் மட்டக்களப்பிற்குப் பயணம் செய்த ரிரோன் பெர்னாண்டோ சுனாமிப் பாதிப்புக்களை நேரில் பார்வையிட்டதோடு நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகள் குறித்தும் ஆராய்ந்தார். இதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம் மீண்டும் மட்டக்களப்பு சென்றிருந்த அவர் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட உயர்மட்ட மாநாடொன்றை கூட்டியிருந்தார்.இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ரிரோன் பெர்னாண்டோ குறிப்பாக மட்டக்களப்பிற்கு சென்றிருந்தபோதிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

இவர்களின் வருகையை நம்பிக்கையுடன் எதிர்பார்த்துச் சென்ற ஆளுநர் இறுதியில் ஏமாற்றமடைந்து திணைக்களத் தலைவர்களுடன் மட்டும் ஆலோசனைகளை மேற்கொண்டு விட்டு திருகோணமலை திரும்பினார்.

# புதிய நாணயத்தாள்கள் வெளியீடு

சிறிலங்கா மத்திய வங்கி புதிய நாணயத் தாள்களை வெளியிடவுள்ளது. 10ரூபா, 20ரூபா, 50 ரூபா, 100 ரூபா மற்றும் 500ரூபா, 1000 ரூபா தாள்கள் வெளியிடப்படவுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் பாரம்பரிய தொடர் கொண்டதாக இந்த நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

நிதியமைச்சர் சரத் அமுனுகம மத்திய வங்கி ஆளுநர் சுனில் மெண்டிஸ் ஆகியோர் இந்த நாணயத்தாள்களில் கையொப்பமிட்டுள்ளனர்.

(32)

# சிறிலங்கா அரசிற்கு வழங்கப்பட்ட நிதியுதவி குறித்து விபரம் தருக!

## வெளிநாட்டுத் தூதுவர்களிடம் ம. [illegible] க. அமைப்பு கோரிக்கை

சிறிலங்கா அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட நிதியுதவி குறித்து விபரமான தகவல்களை வழங்குமாறு சிறிலங்காவில் செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு ஒன்று வெளிநாட்டு தூதரகங்களிடம் கோரியுள்ளது.

சனாதிபதி அண்மையில் ஐந்து சதம் கூட வெளிநாடுகளில் இருந்து சிறிலங்கா அரசாங்கத்திற்கு வழங்கப்படவில்லை என்று கூறியுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மை நிலையினை தெளிவுபடுத்துமாறு அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜப்பானைத் தளமாகக் கொண்டுள்ள இனவேறுபாடுகளுக்கு எதிரான சர்வதேச நிலையம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளில் [illegible]ருடைய நாட[illegible]னால் சிறிலங்காவுக்கு அவசரகால மனிதாபிமான உதவிகள் எந்த வகையில் வழங்கப்பட்டுள்ளன? பணமாகவா அல்லது பொருளாகவா அவை வழங்கப்பட்டன ?

பணமாக வழங்கப்பட்டால் எவ்வளவு தொகை எப்போது வழங்கப்பட்டது?

சனாதிபதி நிதியத்திற்கு நிதியுதவி வழங்கியுள்ளீர்களா எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

வேறு யாருக்காவது நிதியுதவிகள் வழங்கப்பட்டனவா ? அவ்வாறெனில் யாருக்கு, எப்பொழுது, எவ்வளவு தொகை வழங்கப்பட்டது ?

என்பது போன்ற வினாக்களுக்கு பதிலளிப்பதன் மூலம் தற்போது எழுந்துள்ள முரண்பாடுகளுக்கு உரிய தீர்வை காண முடியும் என்று அந்த அமைப்பு வெளிநாட்டு தூதரகங்களுக்கு தெரிவித்துள்ளது. (32)

# சனாதிபதியின் பேச்சை பீரிஸ் பெரிதுபடுத்தி விட்டாராம்

## -சனாதிபதி செயலகம் கூறுகிறது

(கொழும்பு)

சர்வதேச சமூகத்தினால் உறுதி வழங்கப்பட்ட ஆழிப்பேரலை நிவாரண நிதியுதவிகளில் ஒரு சதமேனும் தனது கைக்கு வந்து சேரவில்லையென சனாதிபதி அண்மையில் கூறியதை ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பெரிதுபடுத்தியுள்ளதாக சிறிலங்கா சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது

உலக நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் உறுதி வழங்கிய நிதியுதவிகள் அரசுக்குக் கிடைக்கவில்லை என சனாதிபதி குறிப்பிட்டதாக சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சனாதிபதி நிதியத்திற்கும், பிரதமர் நிதியத்திற்குமான நிதியுதவிகள் மட்டுமே கிடைத்துள்ளதாக சனாதிபதி செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிதியுதவிகள் தொடர்பான விபரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டதாகவும், எதிர்வரும் காலங்களில் கிடைக்கும் உதவிகள் பகிரங்கப்படுத்தப்படும் எனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உறுதி வழங்கப்பட்டுள்ள உலக நாடுகளின் நிதியுதவிகள் ஆழிப்பேரலை புனரமைப்பிற்காகவும், அபிவிருத்திக்காவும் மட்டுமே பயன்படுத்தப்படும் என சனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

இந்நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கேள்விப்பத்திரம் கோருதல், ஒப்பந்தக்காரர்களைத்தெரிவுசெய்தல் போன்றவற்றுக்கான பொறுப்பு உறுதி வழங்கியுள்ள நாடுகளுக்கும், அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் திட்டங்களுக்கு அமைய குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உலக நாடுகளின் அரசுகள் வாக்குறுதி வழங்கியுள்ளன என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (32)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## சந்திரகுமார் டிசாந்தன்

இல 24, கணேசபுரம், கிளிநொச்சி.

தோற்றம் 16.07.1999 - மறைவு 21.03.2004

இவ்வுலக வாழ்வை விட்டு
நீ சென்ற போதும்
உன் செயல்கள் அனைத்தும்
கண்முன் தெரிகிறதே
உலக நியதி இது என்ற போதும்
உன்பிரிவால் வாடி நிற்கின்றோம்.
அன்புச் செல்வமே
உன் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

உன்நினைவால் வாடும்
அம்மா, அப்பா,
சகோதரர்.

இல 24, கணேசபுரம்,
கிளிநொச்சி. (5865)

# 6ஆம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம் 1972 - 6 - 15



மறைவு 1999 - 3 - 21

## கப்டன் யாழ்வேள்

[ஆழ்வாப்பிள்ளை சரவணபவா]

*வைத்தியப் போராளி*

ஆண்டுக ளாறுறின்றோ டசைந்தகன்று விட்டதே.
எங்களெண்ணம் ஆறாமலல்ல லூறுகிறதே
மீண்டு மிப்புவியில் வந்தெம் முன்னின்று - உந்தன்
காண்டரிய காட்சிகளைக் காட்டாயோ
வேண்டும் வரங்களெல்லாம் விண்ணவரே தந்திடுவார்
கூண்டுக் கிளியாய் நீ கண்ணின்ற காலமெண்ணி
தாண்டி வருவாயோ தளர்ந்தழுது புலம்புகின்றோம்
மாண்டவெம் மனங்களுக்கு மருந்தா யுதவுவியே.

நினைவு தினம் 21.03.2005 ஆழ்வாப்பிள்ளை சரவணபவா (யாழ்வேள்) ஆறாமாண்டு நினைவு தினம் பங்குனித் திங்கள் 21ஆம் நாள் ஞாபகாத்தமாக வீட்டுக்கிருத்தியங்கள் நடைபெறும். ஊற்றார்., உறவினர் சக போராளிகளுக்கும் நடைபெறும் என்பதை தெரியவைக்கிறோம்.

தந்தை தாய், சகோதரர்கள்
925 சிவிச்சென்ரர்,
வட்டக்கச்சி.

(5864)

# பணி நிலைக்கான வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 28.03.2005 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

## பணிநிலைகள்

01) ஆளுகை அலுவலர்,
02) எழுதுநர்,
03) கணக்குப்பதிவாளர்.
04) கணக்காய்வாளர்.
05) கணினித் தரவுப் பதியுநர்
06) சிற்றூழியர்.

## கல்வித்தகைமைகள்

பணிநிலை:-01,02 -க.பொ.த (உ\த )பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

பணிநிலை:- 03,04 -க.பொ.த (உ\த )தரத்தில் வணிகப்பிரிவில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

பணிநிலை:-05- க.பொ.த (சா\த )தேர்வில் தேறியிருத்தல் வேண்டும். அத்துடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனமொன்றில் கனினித்தேர்வில் தேறியிருத்தல் வேண்டும்.

பணிநிலை:-06-ஆண்டு 8 கல்வி கற்றிருப்பதுடன்,பணிப்பட்டறிவும் இருத்தல் வேண்டும்.

வேண்டுகை அனுப்பப்படவேண்டிய முகவரி:- பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:-02. 04. 2005 காலை 10.00 மணி

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:-மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

குறிப்பு:-01. நேர்முகத்தேர்வுக்கு சமூகமளிப்பவர்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ்,பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ்,ஏனைய சான்றிதழ்கள், அடையாள அட்டை ஆகியவற்றின் படிவங்களுடன் வருகை தருக.

02. பணிநிலை வேண்டுகையில் பணிநிலைகளைக் குறிப்பிடுட்டு அனுப்புக.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி.

(சி.11397)


# எனது நண்பன் எம்.ஜி.ஆரின் வழியையே நான் பின்பற்றுகிறேன்

## தி.மு.க தலைவர் கருணாநிதி

"நலப்பணித்திட்டங்களுக்கான விழாக்களில் கலந்துகொள்வதில் நான் முன்னாள் முதல்வரும்,எனது நண்பருமான எம்.ஜி ஆரின் வழியைத்தான் கடைப்பிடிக்கிறேன் அதை இப்போதுள்ள அவரது கட்சிக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும்" என்று சென்னை-திண்டிவனம் நெடுஞ்சாலையை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் விழாவில் கலந்துகொண்ட தி.மு.க தலைவர் கருணாநிதி கூறினார். அவர் தொடந்து கூறுகையில்:'

சென்னை நகரின் போக்குவரத்து நெரிசலைத்தீர்க்க சமீபகாலமாகப் பல புதிய திட்டங்களுக்கு நான் அடிக்கல் நாட்டி வருகிறேன். சென்னை புறவழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்துதல்,மதுரவாயல் சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றுதல், கத்திபாரா,கோயம்பேடு,பாடி ஆகிய இடங்களில் பாலங்கள் அமைத்தல் உள்ளிட்ட பல கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் நான் கலந்துகொண்டு வருகிறேன். இந்தத் திட்டங்கள் எல்லாம் மக்களுக்கு நன்மையளிக்கும் திட்டங்கள். இவற்றை நான் ஏன் பட்டியலிட்டுக் கூறுகிறேன் என்றால், ஏற்கனவே இது சம்பந்தமாக பொறாமைப்பட்டுக் கொண்டிருப்பவர்கள், மேலும் பொறாமைப்படட்டுமே என்ற எண்ணத்தில்தான்.

மத்திய அரச விழாவில் கருணாநிதி ஏன் கலந்து கொள்கிறார், அவர் என்ன மத்திய மந்திரியா என்று சிலர் இப்போது கேட்டு வருகின்றனர். இன்றைய தினம் தமிழகக் காங்கிரஸ் கட்சித் தலைவர் வாசனும் இந்த விழாவில் கலந்துகொண்டிருக்கிறார். அவரையும் நாளைக்கு இதே கேள்வியைத்தான் கேட்பார்கள். அவர்களுக்கெல்லாம் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுபோன்ற மக்கள் பயன்பெறும் திட்டங்களில் நான் கலந்துகொள்வதில், முன்னாள் முதல்வரும், எனது நண்பருமான எம்.ஜி.ஆரின் வழியைத்தான் நான் கடைப்பிடிக்கிறேன். நண்பர் எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்த காலகட்டத்தில் பள்ளிகள்,மருத்துவமனைகள், பாலங்கள் எனப் பல திட்டங்கள் தொடக்கி வைக்கப்பட்டன. அது போன்ற விழாக்களில் எல்லாம் தான் கலந்து கொண்டாலும்,அந்தக் கட்டுமானங்களைக் கட்டிய கொத்தனாரை யும், சித்தாளையும் கொண்டே எம்.ஜி.ஆர் திறக்கவைத்தார். அந்த வழியைப் பின்பற்றித்தான் நானும் இதுபோன்ற விழாக்களில் கலந்துகொண்டு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறேன். திறந்தும் வைக்கிறேன். என்றார் கருணாநிதி.



## வீசப்பட்டு வரும் ஆண் சிசுக்கள்



தஞ்சாவூரில் கடந்த ஆறு நாட்களில் இரண் டாவது ஆண்சிசு அனா தையாகக் கிடந்த தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.தஞ்சாவூர் புதிய பேருந்து நிலை யத்தில் கடந்த 14 ஆம் திகதி பிளாஸ்டிக் பையில் பிறந்து மூன்று நாட்களேயான ஆண் குழந்தை வீசப்பட்டது தெரிய வந்தது. தஞ்சாவூர் தெற்குப் பொலிசார் குழந்தையைக் கைப்பற்றி,ராஜா மிராசுதார்அரசு மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்தில் பிறந்து இரண்டே நாட்களான தொப்புள்கொடிகூடக்காயாத நிலையில், துணியில் சுற்றியவாறு ஆண்குழந்தை உயிருடன் கிடந்தது.



மகாராஷ்டிரா மாநிலம் புனேக்குச் சென்ற இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு,மாநில முதல்வர் விலாஸ்ராவ் தேஷ்முக், மக்களவை உறுப்பினர் சுரேஷ் கல்மாடி வீரவாள ஒன்றினை நினைவுப் பரிசாக வழங்கினார்கள்.

# ஜெயகாந்தனுக்கு ஞானபீட விருது!

தமிழகத்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு 2002 ஆம் ஆண்டுக்கான ஞானபீட விருது அறிவிக்கப்பட்டுள்ளது. ஜெயகாந்தனின் இலக்கியப் படைப்பு இந்தியரின் பல்வேறு குணங்களின் ஆழத்தையும், உணர்வுகளையும் படம்பிடித்துக் காட்டுகிறது என்று பாராட்டுப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஞானபீட விருதை ஜெயகாந்தன் பெறுவதாக அறிவித்த தேர்வுக் குழுத் தலைவர் சிங்வி, ஜெயகாந்தனின் ஒவ்வொரு படைப்பும் மனித உணர்வு, சமத்துவம் போன்றவற்றின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது என்று கூறினார். இந்த ஞானபீட விருதுடன் ரூ.5 லட்சம் இந்திய ரூபா ரொக்கப்பரிசும், ஒரு வெண்கலச் சிலையும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஞானபீட விருது பெறும் 2-ஆவது எழுத்தாளர் ஜெயகாந்தன் என்பது குறிப்பிடத்தக்கது.1975 ஆம் ஆண்டு 11 ஆவது ஞானபீட விருதை எழுத்தாளர் பி.வி. அகிலாண்டம் பெற்றார். 38-ஆவது ஞானபீட விருதை ஜெயகாந்தன் பெறுகிறார். டில்லியில் நடக்கும் விழாவில் இந்த விருது அவருக்கு வழங்கப்படும்.



ஜெயகாந்தன்

70 வயது ஆகும் ஜெயகாந்தன் 1934 ஆம் ஆண்டு கடலூரில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார். அவர் இதுவரை 40 நாவல்கள், 200 சிறுகதைகள், ஏராளமான கட்டுரைத் தொகுப்புக்கள் எழுதியுள்ளார்.

அவரது 10 படைப்புகள் சினிமாப் படங்களாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அவர் எழுதிய "ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்" என்ற கதை சினிமாப் படமாக தயாரிக்கப்பட்டது.1964 ஆம் ஆண்டு ஜெயகாந்தன் சினிமாத் துறையில் காலடி எடுத்துவைத்தார்.

# "மோடி பங்கேற்காவிட்டாலும் கூட்டம் நடைபெறும்"

## வடஅமெரிக்க இந்தியர்கள் சங்கம் அறிவிப்பு

குஜராத் முதல்வர் நரேந்திரமோடிக்கு அமெரிக்கா அரசு தனது நாட்டிற்கு வர தடைவிதித்திருந்தாலும் அவர் பங்கேற்கவிருந்த நியூயோர்க் பொதுக்கூட்டம் திட்டமிட்டபடி நடைபெறுமென வட அமெரிக்க இந்தியர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

நரேந்திரமோடி மதச் சுதந்திரத்திற்கு எதிராக செயற்பட்டார் எனும் காரணத்தால் அவர் அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொள்வதற்கான விசா வழங்க அந்த நாட்டு அரசு மறுத்துவிட்டது. அதோடு அவருக்கு ஏற்கனவே சுற்றுலா வர்த்தகப் பயண விசாவையும் அமெரிக்க அரசு ரத்துச் செய்துவிட்டது. அதைத் தொடர்ந்து மோடி தனது அமெரிக்கப் பயணத்தை ரத்துச்செய்ய வேண்டியதாகிவிட்டது.

அமெரிக்காவில் நியூயோர்க் நகரிலுள்ள மடிசன் சதுக்கப் பூங்காவில் மோடி பங்கேற்கும் பொதுக்கூட்டத்துக்கு வட அமெரிக்க இந்தியர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. மோடி பங்கேற்காவிட்டாலும் அந்தப் பொதுக்கூட்டம் திட்டமிட்டபடி நடக்கும் என்று அந்தச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். இதேவேளை அமெரிக்காவில் செயற்படும் இனப்படுகொலைக்கு எதிரான கூட்டணி என்ற இந்தியர்களின் அமைப்பு மோடிக்கு எதிராக மடிசன் சதுக்கப் பூங்கா அருகே கண்டனப் பேரணி நடத்தத் திட்டமிட்டிருந்தது.



குஜராத் முதல்வர் மோடிக்கு விசா வழங்க அமெரிக்கா மறுத்ததைக் கண்டித்து டில்லியில் அமெரிக்க தூதரகத்திற்கு ஊர்வலம்சென்ற பா.ஜ.தொண்டர்களில் ஒருவர் பொலிசாரைத்தாண்டி குதித்து முன்னே செல்ல முயற்சித்தபோது எடுத்தபடம்

# தனது இரு பிள்ளைகளுக்குக் கண்தானம் செய்ய தமிழகத்தில் தாய் ஒருவர் தற்கொலை

(சென்னை)

கண்தெரியாத தனது இரண்டு பிள்ளைகளுக்கும் தனது ஒவ்வொரு கண்ணைத் தானமாக வழங்குவதற்காக தமிழகத்தில் தாய் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது. சென்னை -கொடுங்கையூர் தென்றல் நகரைச் சேர்ந்தவர் சங்கர். கட்டட மேஸ்திரி. இவரது மனைவி தமிழ்ச்செல்வி இவர்களுக்குத் திருமணமாகி 20 ஆண்டுகள் ஆகிறது.

குமரன் (வயது17),மோகன்(வயது-15) என்ற இரண்டு ஆண்பிள்ளைகள் உள்ளனர். இவர்கள் இரண்டு பேருக்கும் கண் பார்வை இல்லை. இதனால் அடையாறிலுள்ள கண் பார்வை தெரியாத மாணவர்கள் பள்ளியில் குமரன் 12ஆம் வகுப்பும்,மோகன் 9 ஆம் வகுப்பும் படித்து வருகிறார்கள்.

இளவயதுப் பிள்ளைகள் இருவரும் கண் பார்வை தெரியாமல் தினம் தினம் அவதிப்படுவதைக் கண்டு பெற்றோர்கள் வேதனை அடைந்தனர். இதனால் இறந்தபிறகு தனது கண்களை தானம் செய்வதாக தமிழ்ச்செல்வி எழுதிக்கொடுத்தார்.

ஆனால் பிள்ளைகளின் நிலை கண்டு மனமுடைந்த அவர் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். தான் இறந்தபிறகு தனது இரண்டு கண்களையும் எடுத்து பிள்ளைகளுக்கு ஆளுக்கு ஒன்று பொருத்துவதற்காக இந்த முடிவை எடுத்ததாகத் தெரிகிறது.

வேலை முடிந்து வீட்டுக்கு வந்த சங்கர் மனைவி தூக்கில் தொங்கித்தற் கொலை செய்திருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். இது குறித்து கொடுங்கையூர் பொலிசில் புகார் செய்தார். இணை கமிஷனர் சைலேந்திரபாபு,துணைக் கமிஷனர் சமுத்திரபாண்டி உத்தரவுப்படி கொடுங்கையூர் பொலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

அங்கு தமிழ்ச்செல்வியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். அப்போது தனது மனைவி கண்தானம் செய்த தகவலை சங்கர் பொலிசாரிடம் கூறினார். அவர்கள் கண்வங்கிக்குத் தகவல் தெரிவித்தனர்.

அவர்கள் விரைந்து சென்று அறுவைச்சிகிச்சை மூலம் தமிழ்ச்செல்வியின் கண்களை எடுத்துப்பத்திரப்படுத்தினர். அதை அவரது பிள்ளைகள் குமரன்,மோகன் ஆகியோருக்கு தலா ஒவ்வொரு கண்ணைப் பொருத்த முடிவு செய்யப்பட்டு இருக்கிறது.

இது குறித்து தமிழ்ச்செல்வியின் மகன் குமரன் கூறியதாவது:-

ஒவ்வொரு நாளும் பார்வை இல்லாததால் நாங்கள் படும் வேதனையைக் காண சகிக்காமல் எங்கள் தாய் கதறி அழுவார். எப்போதும் எங்களிடம் பேசும்போது நான் இறந்து விட்டாலும் உங்களுடன்தான் இருப்பேன். என் கண்கள் வழியாக உங்களுடன் வாழ்நாள் முழுவதும் வாழ்வேன்.

எனவே நீங்கள் வருத்தப்படாமல் இருக்க வேண்டும். நீங்கள் துன்பப்படாமல் வாழ்வதே எனது சந்தோஷம் என்று கூறுவார். அது இதற்கு தான் என்பது தெரியாமல் போய் விட்டது. அவர்கள் வழியாக எங்களுக் குக் கண்பார்வை கிடைக்கலாம். ஆனால் அவரைப்போன்று தாய் மீண்டும் கிடைக்குமா? என்றார்.

## முரளிதரன் - மதிமலர் திருமணம் இன்று



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் - இந்தியப் பெண் மதிமலர் திருமணம் இன்று கோலாகலமாக நடைபெறுகின்றது.

24 வயதான மதிமலர் எம்.பி.ஏ பட்டதாரி ஆவார். டாக்டர் ராமமூர்த்தி-டாக்டர் நித்யா தம்பதியினருக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் மதிமலர், ரதிமலர் இதில் இரண்டாவதாகப் பிறந்தவர் மதிமலர். டாக்டர் ராமமூர்த்தி மறைவுக்கு பிறகு அவர் தனது தாயாருக்குத் துணையாக மலர் மருத்துவமனை இயக்குனரானார்.கடந்த டிசம்பர் மாதம் இவர்களது நிச்சயதார்த்தம் நடந்தது.முரளிதரன் - மதிமலர் திருமணம் சென்னையில் இன்று நடக்கிறது. எழும்பூர் மார்ஷல் ரோட்டில் உள்ள ராணி மெய்யம்மை திருமண மண்டபத்தில் காலை 9 மணிக்கு திருமணம் நடைபெறுகிறது.

இந்தத் திருமண நிகழ்ச்சியில் முக்கிய நபர்கள் தொழில் அதிபர்கள், இலங்கை கிரிக்கெட் வீரர்கள் உட்படப் பலர் கலந்து கொள்வார்கள்.

## வெலிங்டன் டெஸ்ட் போட்டி; நியூசிலாந்து அணி திணறுகிறது



வெலிங்டனில் நடைபெறும் அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் நேற்று நியூசிலாந்து அணி நான்கு விக்கெட் இழப்பிற்கு 122 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் கம்மிங் 37 ஓட்டங்களுடனும், மாஷல் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் பிளெமிங் ஓட்டம் பெறாமல் பார்வையாளர் அரங்கிற்கு திரும்பினார். ஆஸ்லே ஒன்பது ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மெக்ராத் இரண்டு விக்கெட்டுக்களையும், கஸ்பரோவிச், கிளார்க் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முன்னதாக அவுஸ்திரேலியா தனது முதல் இன்னிங்சில் கில்கிறிஸ்டின் 162 ஓட்டங்களுடனும், டேமியன் மார்ட்டினின் 165 ஓட்டங்கள் உதவியுடன் எட்டு விக்கெட் இழப்பிற்கு 530 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது. நியூசிலாந்து சார்பில் பிராங்லின் சிறப்பாகப் பந்து வீசி 128 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இன்று போட்டியின் நான்காம் நாள் ஆகும்.

## வருந்துகிறார் ஸ்டீவ் பக்னர்



டெண்டுல்கருக்கு தவறான முறையில் அவுட் கொடுத்ததற்கு நடுவர் ஸ்டீவ்பக்னர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாப் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் 52 ஓட்டம் பெற்ற நிலையில் ஆட்டம் இழந்தார். நடுவர் ஸ்டீவ் பக்னரின் தவறான தீர்ப்பு காரணமாக டெண்டுல்கர் ஆட்டம் இழக்க வேண்டிய பரிதாபம் ஏற்பட்டது. இதன் மூலம் டெண்டுல்கர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 35ஆவது சதத்தை எடுக்கும் வாய்ப்பை தவற விட்டார்.

இந்த நிலையில் டெண்டுல்கருக்குத் தவறான தீர்ப்பு கொடுத்த ஸ்டீவ்பக்னர் நிருபர்களிடம் கூறுகையில், நான் தொலைக்காட்சி ஒளிப்பதிவை பார்க்கவில்லை. ஆனால் தீர்ப்பு கொடுத்த பின்னர் எனக்குத் தெரிந்து விட்டது. டெண்டுல்கருக்கு தவறான தீர்ப்பு கொடுத்ததிற்காக நான் வருத்தம் அடைகிறேன். தவறு நடப்பது சகஜம் என்றாலும் அந்த தவறை நினைத்துப் பார்க்கும் போது மிகவும் சங்கடமாக இருக்கிறது. இனி வரும் நாட்களில் நான் அதிக கவனத்துடன் செயற்பட முடிவு செய்திருக்கின்றேன்.



கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியுடன் தனது நூறாவது டெஸ்ட் போட்டியை காணும் நடுவர் ஸ்டீவ் பக்னர் தனக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருளை உயர்த்திக்காட்டுகிறார்.


## லாறா விலகினார் சந்தர்போல் தலைவரானார்



தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணி நான்கு டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டியில் விளையாடுவதற்காக மேற்கிந்தியத்தீவு செல்கிறது. முதல் டெஸ்ட் வரும் 31 ஆம் திகதி தொடங்குகிறது.

இந்தப் போட்டிக்கான அணியில் லாறா இடம்பெறவில்லை. ஸ்பான்சர்ஷிப் பிரச்சினை காரணமாக அவர் விலகியுள்ளார். இதனால் சந்திரபோல் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் அணியில் தினேஷ் கார்த்திக்



'சதம்' அடிக்கும் வாய்ப்பை தவறவிட்ட தினேஷ் கார்த்திக் பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் போட்டிக்கு தேர்வு பெறும் நிலையை பெற்றுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு நாள் போட்டியில் சபாகரீம், சமீர்திகே, அஜய்ரத்ரா, விஜய்தகியா, ராகுல் ராவிட் ஆகியோர் விக்கெட் கீப்பராக பணியாற்றினார்கள் , விக்கெட் கீப்பராக இருப்பவர் துடுப்பாட்ட வீரராக இருக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் ராவிட்டே இரண்டு ஆண்டுகளாக விக்கெட் காப்பளராக பணியாற்றி வருகிறார்.

## அனில் கும்ளே அபாரப் பந்து வீச்சு கொல்கத்தாவில் இந்தியாவுக்கு மகத்தான வெற்றி





இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கொல்கத்தாவில் நடைபெற்றுவந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா 195 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

போட்டியின் இறுதி நாளில் 327 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் கைவசம் ஒன்பது விக்கெட்டுக்களுடன் களமிறங்கிய பாகிஸ்தான் ஆட்டத்தின் முதல் பந்திலேயே யுனிஸ்ஹானை இழந்தது. அடுத்து இன்சமாம் களமிறங்கினார்.

மறுமுனையில் ஆடிக்கொண்டிருந்த தபீக் உமர் இன்சமாம் நிதானமான ஆட்டத்தைத் தொடர்ந்தனர். ஆனால், கும்ளேயின் சுழலுக்கு அவர்களால் தாக்குபிடிக்க முடியாது ஆட்டமிழந்தனர். இதனால் அடுத்து வந்த எந்த வீரராலும் நிலைத்து நிற்க முடியவில்லை.

இன்சமாம் 13 ஓட்டத்துடனும், தபீக் உமர் 35 ஓட்டங்களுடனும் கும்ளேயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர்.

வெற்றி வேட்கையுடன் நான்காம் நாள் ஆட்டத்தை அதிரடியாக ஆரம்பித்த பாகிஸ்தானுக்கு ஐந்தாம் நாள் மோசமாக அமைந்ததுடன் போட்டியை சமநிலைக்கு கொண்டு செல்லலாமா என்ற நிலைக்கு தள்ளியது.

இந்த நிலையில், யுஹானா, ஆசிம் கமால் ஜோடி இந்திய பந்து வீச்சைப் பொறுமையாக எதிர்கொண்டு விக்கெட் சரிவை தடுத்து நிறுத்திய போதும் மதியபோசன இடைவேளைக்கு பின்னர் அவர்களால் தாக்குபிடிக்க முடியவில்லை. யுஹானா 22 ஓட்டங்களுடனும் அசிம், கமால் 50 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர்.

மொகாலி டெஸ்ட் சமநிலையில் முடிய காரணமாகவிருந்த அப்துல் ரசாக், கம்ரான் அக்மல் இம்முறை குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இதனால், பாகிஸ்தான் 226 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் கும்ளே ஏழு விக்கெட்டுக்களையும், ஹர்பஜன்சிங் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக இரு இனிங்சிலும் சதமடித்த ராவிட் தெரிவானார். மேற்படி வெற்றி மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியா 1-0 என்ற நிலையில் முன்னிலை வகிக்கிறது.




## வவுனியா வலுவூட்டல் வளாக வருடாந்த விளையாட்டுப் போட்டி

சீட் நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் வவுனியா வலுவூட்டல் வளாக மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப்போட்டி கடந்த வெள்ளியன்று பிற்பகல் 1.00 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வாக விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களின் அணிவகுப்பு மரியாதை பலரினதும் பாராட்டைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களின் பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இதன்போது விசேட தேவைக்குட்பட்ட மாணவர்கள் "வலுவிழந்தோர் வாழ்விழந்தோர் அல்ல" என்பதை நிரூபிக்கும் வகையில் தமது திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்றப்பணிப்பாளர் M.பரமானந்தம்,வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தலைவர் சுப்பிரமணியம்,சீட் நிறுவனத் தலைவர் நரசிங்கம், இலங்கை சிறுவர் பாதுகாப்பு மைய அதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர். (10)

### வவுனியா கோட்ட விளையாட்டுப் போட்டி

வவுனியா கோட்டமட்ட விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா கோட்டக்கல்வி அதிகாரி வீ.கணேசராஜா தலைமையில் இவ்விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பாடசாலைகளுக்கு இடையேயான அணி நடைப் போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

### மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி

இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் இராசரத்தினம் தலைமையில் ஆரம்பமாகியது.

நிகழ்வின் மங்கல விளக்கினை மாவீரர் செங்கோலன் அவர்களின் பெற்றோர் சுடரேற்றி வைத்தனர். தேசியக் கொடியினை இயக்கச்சி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கதிரொளி ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியேற்றலுடன் விழாச்சுடரேற்றி நிகழ்வுகள் ஆரம்பமாகின.சிறப்புரையினை பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் இராமலிங்கம் வழங்கினார். இதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசுப் பொருட்களும் வழங்கி நிகழ்வு நிறைவடைந்தது. (46)

## கோட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டி

துணுக்காய் பிரதேசத்தில் பாடசாலைகளுக்கான கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி கடந்த 11, 14ஆம் திகதிகளில் மல்லாவி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகள் கோட்டக்கல்வி அதிகாரி ஆ.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.


14கோட்ட மட்ட பாடசாலைகள் கலந்து கொண்ட விளையாட்டுப் போட்டிகளில் மல்லாவி மத்திய கல்லூரி முதலாம் இடத்தையும், யோகபுரம் மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (24)

## வெற்றியீட்டிய மாணவர்கள் முல்லையில் கௌரவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மாகாண மட்ட விளையாட்டு போட்டிகளுக்கு சென்று வெற்றி ஈட்டிய வீரர்களுக்கான பரிசளிப்பும், கௌரவிப்பு நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி முல்லை மாவட்ட விளையாட்டு துறை அதிகாரி குருஸ் தலைமையில் காலை 10.30 மணிக்கு இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில் கருத்துரைகளை மேலதிக அரசாங்க அதிபர் சண்முகலிங்கம் நிகழ்த்தினார். தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. பரிசில்களை புதுக்குடியிருப்பு பிரதேச உதவி அரசாங்க அதிபர் செ.தயானந்தா, மேலதிக அரசாங்க அதிபர் சண்முகலிங்கம், தலைமைப் பீட அதிகாரி செல்வி.ப.ஆரணி ஆகியோர் வழங்கி கௌரவித்தனர்.

மாகாண மட்ட விளையாட்டு போட்டிகளுக்கு சென்று வெற்றியீட்டிய 32 விளையாட்டு வீரர்களுக்கு இந்த பரிசுகள் வழங்கப்பட்டன. (20)



## சிந்தனைக்கு

எமது போராட்டம் அடக்கப்படும் - ஒடுக் கப்படும் - பல தேசிய இனங் களுக்கு நம்பிக்கையையும் புத்துணர்ச் சியையும் ஏற்படுத்திய தோடு,வழி காட்டியாகவும் அமைந் துள்ளது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 21-03-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com


## ஐக்கிய இலங்கைக்குள் வாழ்தல்?

"ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வாழலாம் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் இல்லை" என்ற ஜெனிவாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மக்கள் விடுதலைக்கும் உரிமைக்குமான சர்வதேச நிலையத்தின் பொதுச் செயலாளர் வெரீனா விராப்பின் கூற்றுக்கள் தமிழ் மக்களின் உணர்வுகளை அவர் நன்கு மதிப்பீடு செய்துள்ளார் என்பதனை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. ஏனெனில் ஐக்கிய இலங்கைக்குள் இனி தமிழ் மக்களும் –சிங்களவர் களும் இணைந்து வாழ்வதற்குக் கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பம், வாய்ப்பு அனைத்தையும் சிங்கள ஆட்சியாளர்கள் சிதறடித்து விட்ட னர் என்பதே நிதர்சனமாகும்.

இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து ஐக்கிய இலங்கைக்குள் வாழ்தல் என்பது கேள்விக்குரியதொன்றாகவே மாறத் தொடங்கி ருந்தது. சுதந்திரத்தின் மூலம் கைமாறிய அரச அதிகாரத்தை பெற்றுக் கொண்டவர்களான சிங்களவர்கள் ஆரம்பம் முதலே தமிழ் மக்களுக்கான அதிகாரங்களையும், உரிமைகளையும் பகிர்ந்த ளிக்கத் தவறினர். மாறாக அரசியல் யாப்பின் மூலம் பாதுகாக்கப்பட்ட உரிமைகளையும் பறிக்கவே செய்தனர்.

ஒரு வகையில் தனிச் சிங்கள மசோதா, 1972 அரசியல் யாப்பு போன்றவை கூடச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிப்பவை யாகவே இருந்தன. அதாவது பிரிட்டிஷார் வெளியேறியபோது சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்கவென சிறிதளவிலா யினும் உருவாக்கியிருந்த ஏற்பாடுகள் யாவும் சிங்கள ஆட்சியாளர் களினால் பறிக்கப்பட்டன.

இந்நிலையில் தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலையும் இலங்கைத்தீவு பெரும் இரத்தக்களரி காணவேண்டிய நிலையும் ஏற்பட்டது. 1983 இல் முனைப்புப் பெற்ற ஆயுதப் போராட்டம் சுமார் இரு தசாப்த காலம் பெரும்பாலும் இடம் பெற்றது. இதன் மூலம் சர்வதேச நாடுகளின் கவனமும் இலங்கையின் பக்கம் திரும்பியது. இந்நிலையில் தான் யுத்த நிறுத்த உடன்பாடும் ஏற்பட் டது.

கடந்தகாலத்தை விட இம்முறை யுத்த நிறுத்தம் தொடர்பாகவும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாகவும் தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க ஆவல், நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. ஏனெனில் இம்முறை சர்வதேச சமூகம் இவ்விடயத்தில் தீவிர அக்கறை கொண்டிருந்ததோடு யுத்த நிறுத்தத்தினை அமுல்செய்வது தொடர் பாக கண்காணிப்பு குழு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் ஆரம்பத்தில் இருந்தே தமிழ்மக்களின் நம்பிக்கையை முழு அளவில் நிறைவு செய்ய முடியாது போனாலும் ஓரளவிற்கு நிறைவு செய்வது போன்ற தோற்றப்பாடே காணப்பட்டது. அதாவது விடுதலைப்புலிகளுக்கும்– அரசிற்கும் இடையிலான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதோடு, புலிகளுக்கெதிரான மறைமுகப் போரையும் அரசாங்கம் நிறுத்தி யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்கமேற்கொண்ட முயற்சிகளும் இந்நம்பிக்கைக்கு காரண மாகின.

ஆனால் சிறிலங்காவில் எழுந்த ஆட்சி அதிகாரத்திற்கான போட் டியினால் இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியில் இருந்தும் வெளியேற்றப்பட்டது. இந்த வகையில் ஐ.தே.முன்னணியின் அரசாங்கத்தின் வெளியேற்றமானது சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து மக்கள் மத்தியில் பெரும் கேள்வியை எழுப்பியது சமாதானப் பேச்சுவார்த்தைகளின் எதிர் காலம் குறித்தும் சந்தேகத்தை தோற்றுவிப்பதாகியது.

புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், தாமும் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்போம் என்றே தெரிவித்துவரினும் அக்கூட்டணிக்குள் உள்ள முரண்பாடுகள், இனப்பிரச்சினை விவகாரத்தில்அவர்கள் வெளிப்படுத்தும் எதிர்ப்புக்கள் சமாதானப் பேச்சு வார்த்தைகள் குறித்த கேள் வியைத் தவிர்க்க முடியாது எழவைப்பதாகவே உள்ளது.

இவை யாவற்றிற்கும் மேலாக சுனாமி அனர்த்தத்தின் பின்னரும் அரசாங்கமும் அதன் பிரதான பங்காளியான ஜே.வி.பியும் நடந்து கொண்டுள்ளவிதமானது புலிகளுக்கும்–அரசிற்குமிடையில் இணக்கப்பாடுகள் எதுவும் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டா? என்ற ஐயத்தையே எழவைப்பதாகவுள்ளது, இயற்கை அனர்த்தத்தினால் மக்களுக்கு ஏற்பட்ட துயரத்தைப் போக்கவே இனவேறுபாடு காட்டும் ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு ஒன்றிற்கு ஒத்துவருவார்களா? என மக்கள் மனங்களில் சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததே.

இந்தவகையில் வரலாற்று ரீதியிலேயே முரண்பட்டவர்களாக காணப்படும் இவ்விரு இனமக்களும் தொடர்ந்தும் ஒரே அரசின் கீழ் வாழ்வதென்பது சாத்தியப்பாடற்றதொன்று. இதனையே மக்கள் விடுதலைக்கும் உரிமைக்குமான பொதுச் செயலாளர் வெரீனா விராப் சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது இலங்கைத் தீவு பிரிவினை நோக்கிச் செல்கின்றது என்பதே அவரின் மதிப்பீடாகவுள்ளது.

அதாவது யதார்த்த நிலையில் நாடு பிரிவினையை நோக்கி விரைந்து செல்கின்றது என்பதே நியாயமாகும் தற்போது வெளி யாகும் தகவலின் படி சுனாமி அனர்த்த நிதி முகாமைத் துவத்திற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என வற்புறுத்தப்பட்டு வருவதோடு அரசாங்கம் இது தொடர்பான இணக்கப்பாடு ஒன்றிற்கு வரலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இதில் கூடத் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ள எதாவது இருக்குமா? ஏனெனில் அரசாங்கம் பொதுக் கட்டமைப்பிற்கு இணங்கி வரலாம் என்ற தகவல்கள் வெளியாகிக் கொண்டி ருக்கின்றபோதும் அதற்கும் மேலாக பொதுக்கட்டமைப்பு உருவாக் கப்படுமானால் ஆட்சியினைக் கவிழ்ப்போம் என்ற ஜே.வி.பியின் மிரட்டல் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில் ஐக்கிய இலங்கைக்குள் வாழ்தல் என்பதில் தமிழ் மக்கள் எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்?

# சு.க.வின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து பண்டாரநாயக்க குடும்பத்தினர் கூடி ஆராய்வு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றியும் எதிர்கால சனாதிபதித் தேர்தல் வேட்பாளரை நியமிப்பது சம்பந்தமாக பண்டாரநாயக்கா குடும்பத்தினரின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் பலர் ரகசியமாக சனாதிபதி மாளிகையில் கலந்தாலோசித்துள்ளனர். இதில் சந்திரிகா மற்றும் அனுராபண்டார நாயக்க அவரின் நெருங்கிய உறவினர்கள் கலந்து கொண்டுள்ளனர். இக் கூட்டத்தில் அனுரா பண்டாரநாயக்கவுக்கு நல்லதொரு பதவி வழங்க வேண்டும் எனவும் நிறை வேற்றதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை மாற்றி அமைப்பது சம்பந்தமாகவும் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

# யாழ்.இல் கடமைபுரியும் படை அதிகாரியின் வாகனம் விபத்தில் சிக்கியது பற்றி விசாரணை

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய பெண் சிப்பாய் ஒருவருடன் இராணுவ வாகனத்தில் பயணம் செய்யும் போது வாகனம் விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பாக யாழ்.மாவட்ட கட்டளை தளபதியினால் நியமிக்கப்பட்ட குழுவொன்று விசாரணை நடத்தி வருவதாக ராவய பத்திரிகை கூறுகிறது. விபத்தில் சம்பந்தப் பட்டவர் பருத்தித்துறையிலுள்ள 524 படைப்பிரிவு கட்டளை அதிகாரியான கபிலரத்நாயக்க கேணல் தர அதிகாரி எனவும் அவருடன் சென்றவர் இராணுவத்தின் முதலாவது பெண்கள் அணியில் இருந்து தப்பிச் சென்றவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இருவரும் கடந்த மார்ச் ஆறாம் திகதி கொழும்பில் மாகாண அணிகளுகிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிக்காக சென்றிருந்ததாகவும் அன்று இரவு 10.30 மணியளவில் மிலேனியம் பார்க்கில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில் உயர் அதிகாரி ஒருவர் இவர்களைக் கண்டபோது வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி வந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். பின்னர் தமது பயணத்தைத்தொடர்ந்த நிலையில் வாகனம் விபத்தில் சிக்கியுள்ளது. எனினும் ஆரம்ப விசாரணையின் போது மேற்படி பெண் சிப்பாய் மீண்டும் இராணுவத்தில் சேர்ந்து கொள்ள விருந்ததாகவும் அவரை அழைத்துச்செல்லும் போதே மேற்படி விபத்துக்குள்ளானதாகவும் தெரிவித்துள்ளார். விசாரணைகள் தொடர்கின்றன.

# கல்விமறுசீரமைப்புக் கெதிரான ஜே.வி.பியின் குரல் முனங்கலாக மாறியுள்ளது

## ஐ.தே.க.பா.உ ஹேமகுமார நாணயக்கார

கல்வி மறுசிரமைப்புக்கு எதிரான ஜே.வ.பியின் குரல் முனங்கலாக மாறி இருப்பதாக ஐக்கிய தேசியகட்சியினர் தெரிவித்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார கருத்துதெரிவிக்கையில்; ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனியினர் தேர்தலுக்கு முன் மக்கள் முன்னிலையில் முன்வைத்த ரட்ட பெரட்ட என்ற புத்தகத்தில் அரசுக்கு சொந்தமான எந்தவொரு சொத்தையும் தனியார் மயப்படுத்தமாட்டோம் என தெரிவித்திருந்தாலும் இப்போது பல அரச சொத்துக்களை தனியார் மயப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று கொண்டு இருக்கின்றன. இதற்கு ஜே.வி.பி தரப்பிலிருந்து எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கப்படுவதில்லை. தற்போது செய்யப்பட்டு கொண்டிருக்கும் கல்வி மறுசீரமைப்புக்கு எதிரான ஜே.வி.பி யின் குரல் முனங்கலாகவே மாறி இருக்கிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# விசாமுடிவடைந்த இலங்கையரை மலேசிய அரசு நாடுகடத்தியது

(கொழும்பு)

தமது விசா முடிவடைந்த பின்னரும் மலேசியாவில் தங்கியிருந்த இலங்கையர்களை மலேசிய அரசு நாடு கடத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரை 833 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் வெளிவிவகார அமைச்சு மேலும் 13 இலங்கையர்கள் நாடு கடத்தப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. முன்னர் மலேசியாவில் சட்ட விரோதமாகத் தங்கியிருந்த வெளிநாட்டவர்களை கடந்த 28ஆம் திகதிக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறும்படி மலேசிய அரசு காலக்கேடு ஒன்றை விதித்திருந்தது. இந்த திட்டத்திற்கு அமைய இலங்கையர்கள் அனைவரும் மலேசியாவிற்கான இலங்கைத் தூதுவராலயம் சென்றதனையடுத்தே அவர்கள் தற்சமயம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (32)

# ஜே.வி.பி. அதிகாரத்தைக் கைப்பற்றியது மக்களின் தேவையை நிறைவேற்றவல்ல

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி. அதிகாரத்தைக் கைப்பற்றி இருப்பது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அல்ல என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ் சாட்டியுள்ளார். இது தொடர்பாக கருத்து தெரிவிக்கும் எதிர்கட்சித் தலைவர் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சனைகளின் பொழுது மௌனம் சாதிக்கும் ஜே.வி.பி தரப்பினர் அரசாங்கத்தினுள் தமது அந்தஸ்து தொடர்பான கேள்விகள் எழும்பும் பொழுது மட்டுமே குரல் எழுப்புகின்றனர் என சுட்டிக்காட்டியுள்ளார். (32)

# மகிந்த ராஜபக்ஷ லண்டன் பயணம்

சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை 10.35 மணியளவில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து லண்டன் நோக்கி பயணமானார். சிறிலங்கன் யூ.எல். 501 விமானத்தின் மூலம் இவர் பயணமானதாகத்தெரிவிக்கப்படுகிறது. (32)

# சுனாமி அனர்த்த நிதியாக இதுவரை 900 கோடி ரூபா கிடைத்துள்ளது

## -நிதியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தீவகத்தை மீண்டும் கட்டியெழுப்ப வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து இதுவரை 900 கோடி ரூபா (ஒன்பது பில்லியன்) சிறிலங்கா அரசுக்குக் கிடைத்துள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ. ஜயசுந்தர அறிவித்துள்ளார். இது வரை கிடைக்கப்பெற்ற நிதியில் 120 கோடி ரூபா நேரடியாக அரசின் கணக்கிற்கு கிடைத்துள்ளதாகவும் மிகுதி 780 கோடி ரூபா புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்காகப் பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொது அபிவிருத்தி திட்டங்களுக்கு 15,000 கோடி ரூபா அளவில் தேவைப்படுவதாக அரசு மதிப்பீடு செய்துள்ளது. அந்த திட்டங்களைச் செயற்படுத்த பல்வேறு அரச மற்றும் சர்வதேச நிறுவனங்கள் தனித்தனியாகச் செயற்படுவதாகவும் நிதியமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

நிர்மாணப் பணிகள் மற்றும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் அந்தந்த நாடுகளாலும் அமைப்புகளாலும் செயற்படுத்தப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# "புதுநானூற்றின்பரணி" நூல் வெளியீட்டு விழாவில்...



படங்கள்: எழிலன்

# படகுகள் திருத்தப்பட்டுள்ளபோதும் படையினரின் கெடுபிடிகளே மீன்பிடிக்குத் தடையாகவுள்ளது!

## — வடமராட்சி வட. கடற்றொழிலாளர் ச.ச. செயலாளர்

சுனாமியால் பாதிக்கப்பட்ட படகுகள் திருத்தப்பட்டுள்ளபோதும் தொழிலுக்காகக் கடலுக்குச் செல்லும் பாதைகளைத் திருத்து வதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்து வருவதே தொழிலாளர்கள் கண்ணாடியிழைப் படகுகளில் மீன்பிடிக்கச் செல்லாமைக்குக் காரணம் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட படகுகளில் குறிப்பிடத்தக்கவை திருத்தப்பட்ட போதிலும் மீன வர்கள் இப்போது கட்டு மரங்கள் மட்டுமே பாவித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இது தொடர்பாக சூரியகுமாரனிடம் கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது, கடலுக்குச் செல் வதற்கு கண்ணாடியிழைப் படகு களை கொண்டு செல்ல முடியாத நிலையில் பாதைகள் உள்ளன. அதனூடாக படகுகளைக் கொண்டு சென்றால் அவை மீண்டும் உடைந்து விடும். பாதையைத் திருத்த இராணு வத்தினர் தடை விதிக்கின்றனர்.

கடற்றொழிலாளர்கள் தொழி லுக்காக கடலுக்குச் செல்லும் பாதைகள் திருத்தப்பட வேண்டும் அதற்கு அனுமதியளிக்க வேண்டு மென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் முன்னிலையில் கேட்ட போது அதற்கு எவ்வித பிரச் சினையும் இல்லை திருத்தலாம் என யாழ். மாவட்ட சிறிலங்கா இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோன் கூறினார். ஆனால் பிராந்தியப் பொறுப்பாளர்கள் வந்து தடை போடுகிறார்கள் எனவும் தெரிவித் தார்.

மீன்பிடி இன்னமும் பாதிக்கப் பட்டிருப்பதற்கு முக்கியமான காரணம் படகுகளை மீளவும் கடலுக்குக் கொண்டு செல்லக் கூடிய வகையில் பாதைகள் இல்லை. சுனாமி கடல் அனர்த்தத் தினால் அவை மூடப்பட்டுள்ளன. அந்தப் பாதைகளை துப்புரவு செய்யக்கூடிய ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றோம். ஆனால் படையினருடைய அச்சுறுத் தல்களும் தடைகளும் இதற்கு முட்டுக் கட்டையாக இருக்கின்றன.

இதே வேளை இந்தப் பாதை கள் கற்கள் நிறைந்து காணப்படும் காரணத்தினால் படகுகள் அந்தக் கற்களில் முட்டியவுடன் சேதப்படும் எனற அச்சம் எங்களுக்கு உண்டு.

இந்தப் பாதைகளைச் செப் பனிடுவதற்காக சேவாலங்கா என்ற நிறுவனத்தினூடாக 78 இலட்சம் ரூபா மதிப்பிடப்பட்டு அந்தப் பாதைகளை திருத்த நடவடிக்கை எடுத்து வருகின்ற போதிலும் எங்களுடைய மக்களின் விருப்பத் திற்கேற்ப பாதையை திருத்த இராணுவம் விடுவதாக இல்லை. ஆழமாகத் தோண்டவும் கூடாது கற்களை எடுத்து உயரமாகவும் போடக் கூடாது எனக் கூறு கிறார்கள்.

இதனால் மக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே அடிக்கடி சில பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நாங்கள் கண்காணிப்பு குழு விற்கும் மனித உரிமைக் குழு விற்கும் அறிவித்தோம். அவர்கள் வந்து நேரடியாகக் கதைக்கும் போது தங்களுடைய பாதுகாப்புக் காரணங்களுக்காக இதனை விட முடியாது என இராணுவத்தினர் கூறுகின்றனர் என்றார்.

## புது...

கொடியினை துரைராஜாவும் ஏற்றினார்கள். பின்னர் மங்களவிளக்கினை புளோறிடா தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த திருமதி. சிறீஸ்கந்தராஜா ஏற்றினார். ஆசியுரையையும் வரவேற்பு நடனமும் நடைபெற்றது. தலைமையுரையினை அடுத்து கலைநிகழ்வுகளாக நடனம், நாடகம் அக்கினி இசைக்குழுவின் இசை மழையும் நடைபெற்றது. இதனையடுத்து "புது நானூற்றின் பரணி" கவிதை நூல் அரங்கமும் இடம் பெற்றது. இதற்கு அறிமுக உரையினை கவிஞர் கந்தவனமும், மதிப்புரையை பொன்னையா விவேகானந்தனும், (சி.ரி.ஆர். அறிவிப்பாளர்) திருமதி.கலாநிதி குலமோகன் அவர்களும் வழங்கினர். நன்றியுரையினை துரை, இரவீந்தரன் நிகழ்த்தினார். (எ)

## சர்வசன...

தீர்வை முன்னிலைப்படுத்தி சனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதை நோக்காகக் கொண்டே இக் கருத்துக் கணிப்பை நடத்த சனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை சனாதிபதி நடத்த முற்படுவதானது அரசியல் யாப்பிற்கு முரணானது எனவும் அத்தகையதொரு முயற்சி எடுக்கப்படுமானால் நேரடியாக வீதியில் இறங்கிப் போராடுவதெனவும் ஐ.தே.க தீர்மானித்துள்ளது.

இத்தகையதொரு நடவடிக்கைகளுக்கு பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்விடயத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடனும் இணைந்து செயற்படப் போவதாக தெரிவித்துள்ள ஐ.தே.கட்சி வட்டாரங்கள் பாராளுமன்றத்திற்கு வெளியிலுள்ள எதிர்கட்சியினரின் ஆதரவும் பெறப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

## மட்டு...

ருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட ரயில் பொலநறுவை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. அப்போது பொலிசார் பயணிகளின் பொதிகளை சோதனையிட்டனர். அதில் இரண்டு கிளைமோர் குண்டுகளும் கண்டு பிடிக்கப்பட்டன. ஏறாவூர் ரயில் நிலையத்தில் இருவர் இந்தப் பொதியை வெலிக்கந்தையிலுள்ள ஒருவரிடம் ஒப்படைக்குமாறு தந்தாக கைதானவர் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட இந்நபர் நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் நாலாம் ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## இராணுவ....

வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். குறிப்பிட்ட ஆங்கில வாரஇதழான சண்டே லீடரில் குறிப்பிட்டிருந்த செய்தி தவறானதா எனக் கேட்டபோது வலிந்த பின்னணி யுடன் அந்தச் செய்தியை வழங்கினார்கள். அதில் எது உண்மை என்பது பற்றியதெல்லாம் நான் கருத்துக்கூற விரும்ப வில்லை.

அந்தச் செய்தியாளர் அங்கு சென்றிருந்த சமயம் யாராவது விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை அங்கு பார்த் திருக்கலாம். அவர் பொய்சொல் கிறார் என்று நான் கூறவரவில்லை. விடுதலைப்புலிப் போராளிகள் இந்தப் பகுதிக்குள் வந்துபோ வதற்கு வாய்ப்பிருக்கிறது. இந்தப் பகுதியில் நிறையப்பதுங்கு குழிகள் இருக்கின்றன. ஏனெனில் கடந்த இருபது வருடங்களாக இந்த இடத்தில் சண்டை நடந்து வந்துள்ளது. இது ஒரு ஒதுக்குப்புறமான எல்லைப்புறம். கொழும்பில் கூட இவ்வளவு பதுங்குகுழிகள் இருக்கின்றன என அவர் மேலும் கூறினார்.

# வவுனியாவில் சிறுவர்களுக்கு ஊட்டச்சத்து உணவு வழங்கல்

வவுனியா மாவட்டத்திலுள்ள முள்ளிக்குளம், கந்தஞானிக்குளம், பரியாரிக்குளம் ஆகிய இடங்களில் இரண்டு வயதுக்கு மேற்பட்ட 50 சிறுவர்களுக்கும், ஒருவயதுக்கு உட்பட்ட 50 குழந்தைகளுக்குமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவுகளும், பிஸ்கட் வகைகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் 20 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துமிக்க உணவுகளும், பொருட்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் குழந்தைப் பிள்ளைகளுக்கான பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

## பொருட்களின்...

கிடையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் வேகமாக அதிகரித்துச் செல்கின்றது. மக்கள் எப்படி இந்த அழுத்தங்களை தாங்கிக் கொள்ளப் போகிறார்கள் என்பது தொடர்பில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான தெளிவும் இல்லை. இந்த நிலை தொடருமானால் நாடு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததே எனக் குறிப்பிட்டார். (32)

## சிலாவத்தை...

கரும்புலி மேஜர் டாம்போவின் திருவுருவப்படத்திற்கு அவரது பெற்றோர் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து மன்னார் முசலி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கருணன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் சிறப்புரையாற்றினார்.

அத்துடன் மன்னார் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவரசியும் உரையாற்றினார். இறுதியில் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

## இராணுவக்கட்டுப்பாட்டு....

முகாம் பகுதி படங்களையும் அப்பத்திரிகை பிரசுரித்துள்ளது.

"ஹபறண-வாழைச்சேனை வீதியில் செவனப்பிட்டியவிலிருந்து பத்துக் கிலோ மீற்றர் தொலைவில் இந்த முகாம் அமைக்கப் பட்டுள்ளது. கடந்த வாரம் இந்த முகாமிற்கு நாம் விஜயம் செய்தோம். அப்போது அந்தக் கிராமத்திற்குள் நுழைந்தவேளை அக் குழுவைச் சேர்ந்த ஒருவர் ஆயுதத்துடன் காவல் நின்றார். அவரது அனுமதியுடனேயே மேற்கொண்டு செல்ல வேண்டியிருந்தது. அவருக்கு 12 வயது இருக்கும்.

அயல் கிராமமான கரபொல மக்கள் தம்மை அக்குழுவைச் சேர்ந்தவர்கள் துன்புறுத்துவதாக முறையிட்டுள்ளனர். அத்துடன் ஹரபொல மற்றும் சுசிறிகம கிராம பெண்கள் அமைப்பு அக்குழு வினரை தமது கிராமத்தைவிட்டு வெளியேற்றுமாறு கோரி அருகிலுள்ள பிரதான வீதி இராணுவ முகாமின் முன்னால் போராட்டம் ஒன்றையும் செய்துள்ளனர். இதற்கு அப்பகுதி பௌத்த பிக்குக்களும் ஆதரவு வழங்கியுள்ளனர். தங்களது இந்தக் கோரிக்கையை அரசு கவனத்தில் கொள்ளாவிட்டால் இம்மாதம் 29ஆம் திகதி பாரிய அளவில் ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்வோம் என எச்சரித்துள்ளனர்.

அக்குழுவினர் கிராமத்திற்குள் திடீரென நுழைந்து இளைஞர்களை கடத்திச் சென்று எந்தவிதமான வெளித் தொடர்புகளும் மேற்கொள்ள முடியாத இடங்களில் வைத்து தமது செயற்பாடுகளை பலாத்காரமாக செய்விக்கின்றனர்.

இராணுவ முகாம்கள் பல அமைந்துள்ள பகுதியை அண்மித்ததாக அல்லது அதை ஒட்டியதாகவே தீவுச்சேனை கிராமம் இருக்கின்றது. தீவுச்சேனையிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்திலேயே முத்துகல இராணுவ முகாமின் காவல் நிலையம் உள்ளது.

காவல் கடமையில் நின்றவரின் தகவல் படி மங்களம் மாஸ்டர் என்பவர் தலைமையில் இந்த முகாம் இயங்குகின்றது.

அவரைச் சந்திப்பதற்காக நாம் முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் பத்திரிகையாளர்களை சந்திப்பதற்கு தனக்கு அனுமதி இல்லை என மற்றுமொரு உறுப்பினர் ஊடாக அவர் கூறிவிட்டார்.

பொதுமக்கள் மற்றும் படைத்தரப்பு தகவலின் படி இந்தக் குழுவினரே விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலையின் பின்னணியில் இருந்துள்ளனர் என தெரியவந்துள்ளது.

இவர்கள் இங்கு இருப்பதை கிராம மக்கள் விரும்பவில்லை. ஆனால் படையினரின் ஒத்துழைப்பு இவர்களுக்கு இருக்கின்றது. இவர்களுக்கு எதிராக முறைப்பாடுகளோ அல்லது கருத்துக்களோ வெளியிட்டால் கொலை அச்சுறுத்தலை எதிர்நோக்கி வாழ்கின்றனர் அப்பாவிக் கிராம மக்கள். கடந்த மார்ச் 14 ஆம் திகதி இரவு இப்பகுதியில் உள்ள ஹரபொல கிராமத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களை இக் குழுவினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து இப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டமும் நடத்தியுள்ளனர்.

இப்பகுதி மக்கள் அச்சத்துடனும் பீதியுடனும் வாழ்கின்றார்கள். இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழு என்று யாராவது இருக்கின்றார்களா எனக் கேட்டால் கண்டும் காணாதவர்கள் போல் தெரிந்தும் தெரியாதவர்கள் போல் அப்படி இருக்கிறார்கள் என்றுதான் கேள்விப்படுகிறோம் என்று இரகசியமாக கூறுகிறார்கள் என அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது